IT OUGHT TO BE BEAUTIFUL I LIVE HERE
JHLC - ESTD:10.09.1943

## யா / யாழ் இந்து மகளிர் கல்லூரி




### ஆரம் - 01

# தமிழ் மன்றம்

## 2014

# தமிழ் ஆரம்

# 2014

இதழ் - 01


இதழாசிரியர்கள் :

**செல்வி ஜனனி ஐயாத்துரை**

**செல்வி ஹாயத்திரி சண்முகநாதன்**



யாழ் இந்து மகளிர் கல்லூரி,

யாழ்ப்பாணம்

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்து மளந்திடும்
வண் மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வான மறிந்த தனைத்து மறிந்து
வளர் மொழி வாழியவே!

# கல்லூரிக் கீதம்

திரு மிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி எங்கள்
பெருவருமிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடும் கல்லூரி உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி - உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்ந்தோமோ உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ,

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடும் கல்லூரி - உயர்
சிந்தை வளம் பெற மெய்ப்பொருளறிவைச்
சேர்ந்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவை
சுரந்திடுங் கல்லூரி - உரை
வந்தனை செய்து பைந்தமிழ்மாலை
வாழ்த்தொடு சூடோமோ - உனை
வந்தேமாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ,

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி - ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ,

கலைமகள் உலகக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி - என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலமகள் நெற்றித் திலமென்றேத்த
நிலைத்திடுங் கல்லூரி - உனைத்
தலைமுறையாகத் தொழுதுளங்குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

## எங்கள் அதிபர்



திருமதி மிமலாதேவி விமலநாதன் B.A (Hons.), PGDE, MED



# ஆசியுரை

**யா**ழ் இந்து மகளிர் கல்லூரித் தமிழ் மன்றத்தின் முதல் வெளியீடாக “தமிழ் ஆரம்” என்ற சஞ்சிகைக்கு ஆசி கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது கல்லூரியின் காவலராய் வீற்றிருக்கும் நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகர் பாதம் பணிந்து கல்லூரியின் ஸ்தாபகர் நினைவுகளையும் மனதில் இருத்தி இக்கல்லூரியின் வளர்ச்சிக்கும் தாய் மொழியாம் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் அரும்பெருந் தொண்டாற்றிய பெரியார்களின் உள்ளங்களையும் நினைவு கூருகின்றேன். யாழ் நகரில் புகழ் பெற்ற கல்லூரிகளில் ஒன்றாகத் திகழும் எமது கல்லூரியானது வருடாந்தம் தமிழ்த்தின விழாக்களை சிறப்புடன் நடாத்தி வருவது யாவரும் அறிந்ததே. இத்தகைய விழாக்கள் மூலம் முத்தமிழாம் இயல், இசை, நாடகம் போன்ற கலைகள் மாணவர்களிடையே ஊக்குவிக்கப்பட்டு அவர்களிடையே காணப்படும் பல்வேறு திறமைகள் வெளிக்கொணரப்படுகின்றன. தத்தம் திறமைகளையும் கலை ஆர்வத்தையும் மேலும் மேலும் வளர்த்து தாமும் பயன்பெற்று ஏனையோரையும் ஊக்குவிக்கத் தூண்டும் வகையில் இவ்விழாக்கள் உதவுகின்றன.

அனைத்து மாணவர்களும் மேலும் தமது திறமைகளை மெருகூட்டி வளர்த்து நற்பயன்கள் பெற இறைவன் அருள்புரிய வேண்டும் என வாழ்த்துகின்றேன். அதுமட்டுமன்றி இம் மலரானது எவ்வித இடையூறின்றியும் வருடாந்தம் தொடர்ந்து வெளிவர எல்லாம் வல்ல நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி என் மனப்பூர்வமான நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

“வித்யா தனம் சர்வ தனாத் ப்ரதானம்”
“கல்விச் செல்வமே எல்லாச் செல்வங்களிலும் சிறந்தது”

**திரு. பா. நகுலேஸ்வர ஐயர்**
யா/ இந்து மகளிர் கல்லூரி
நடுத்தோட்ட இராஜவரோதய பிள்ளையார் பிரதமகுரு.



## வாழ்த்துச் செய்தி

தமிழ்மொழி, தமிழர் பண்பாடு எனக் கொண்டு இயங்கி வரும் இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றமானது தமிழ் ஆரம் என்னும் சஞ்சிகையை முதன் முறையாக வெளியிட இருக்கின்றது. இச் சஞ்சிகைக்கு ஆசி வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

பள்ளிப் பருவத்தில் மாணவர்களின் கல்வி அறிவின் வெளிப்பாட்டுக் களமாகவும், அனுபவப் பகிர்வின் வெளிப்பாடாகவும் சஞ்சிகைகள் அமைகின்றன.

கல்லூரியின் தமிழ் மன்றத்தால் வெளியிடப்படும் சஞ்சிகையானது மாணவர்களின் ஆளுமைப் பரிணமிப்பிற்கும், அவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரவும் வழி சமைக்கிறது. மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளைத் தூண்டும் விதமாக சஞ்சிகைகள் வகுப்பு ரீதியாக கையெழுத்துப் பிரதிகளாக ஆக்கப்பட்டன.

மாணவர்களின் எழுத்தாக்கத் திறனை வளர்த்திடும் பொருட்டு வெளிவரும் இச்சஞ்சிகையின் மலர்க் குழுவினரையும், மன்றப் பொறுப்பாசிரியரையும், பாட இணைப்பாளரையும், ஏனைய அங்கத்தவர்களையும் மனதார வாழ்த்துவதுடன் மலரானது தொடர்ந்து வெளிவந்து மணம் பரப்ப எல்லாம் வல்ல நடுத்தோட்ட இராஜவரோதய பெருமானின் ஆசிவேண்டி வாழ்த்துகின்றேன்.

**திருமதி மி. விமலநாதன்**
அதிபர்
யா/ இந்து மகளிர் கல்லூரி



# வாழ்த்துச் செய்தி

**யா**ழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளால் வெளியிடப்படும "தமிழ் ஆரம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

யாழ் வலயத்தில் உள்ள மாகாணப் பாடசாலைகளில் முன்னணி மகளிர் பாடசாலை யாக இப்பாடசாலை திகழ்ந்து வருகின்றது. இப்பாடசாலையின் தமிழ் மன்றமானது முதன்முதலாக ஒரு மலரை வெளியிட முன்வந்திருப்பது பாராட்டுக்குரியதாகும். தாய் மொழியாம் தமிழ் மொழியில் புலமை எம்மவர் மத்தியில் அருகி வருகின்ற நேரத்தில் இவ்வாறான நூல்கள் அவசியமானவையாகும். மாணவர்களிடம் தமிழ்மொழி பாடத்தில் ஆர்வத்தினைத் தூண்டுவதன் மூலமே இப்பாடத்தினது பெறுபேறுகளை மேலும் அதிகரிக்க முடியும்.

"தமிழ் ஆரம்" எனும் இச்சஞ்சிகையில் ஆக்கங்களை எழுதுவதன் மூலமும், இச்சஞ்சி கையை வாசிப்பதன் மூலமும் தமிழ் மொழி பாடத்தில் மாணவர்களது ஆர்வம் மேலும் அதிகரிக்கும் என நம்புகின்றேன். இச்சஞ்சிகை சிறப்பாக வெளிவர உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன், இச் சஞ்சிகை பல்லாண்டு காலம் தொடர்ந்து வெளிவந்து தமிழ் வளர்க்க வாழ்த்துகின்றேன்.

**திரு. செ. உதயகுமார்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



## வாழ்த்துச் செய்தி

**பா**டசாலைகள் சமூகத்திற்கு பொருத்தமான மனித வளங்களை உருவாக்கும் நிறுவனங்களாக செயற்படவேண்டும். உலக மாற்றங்களுக்கும், சவால்களுக்கும் முகம்கொடுக்கவேண்டிய வகையில் ஆசிரியர்கள் மாணவர்களைத் தயார்ப்படுத்த வேண்டும். பாடசாலைகள் வெறும் அறிமுறை சார்ந்த அறிவை மட்டும் வழங்கும் நிலையங்களாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. சமூகம் எதிர்பார்க்கும் அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளிடைத் தொடர்பு, விழுமியங்களை பேணிப் பாதுகாக்கும் திறன்கள், ஆளுமைப் பண்பு போன்ற தேர்ச்சிகளை உருவாக்கும் செயற்பாடுகளில் இருந்து தவறி விடுகின்றன. இதுவே இன்று இளம் சமூகம் எதிர்நோக்கும் சவால்களாக மாறியுள்ளன.

பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகள் வலுவூட்டப்பட வேண்டும். மாணவ மன்றங்கள் செயற்றிறன் கொண்டவையாக வழிப்படுத்தப்படவேண்டும். ஆசிரியர்களின் செயற்படுதிறன் அதிகரிக்க வேண்டும். இன்று தமிழ்மொழிப் பாடத்தின் தேசிய மட்டப் பெறுபேறுகளில் தளம்பல் நிலை காணப்படுகிறது. தமிழ் மொழியை எழுத, வாசிக்க, உச்சரிக்கத் தெரியாதோர் தொகை அதிகரித்துள்ளது. அச்சு ஊடகங்களில் தரமான கட்டுரைகளை காண முடியாதுள்ளது. கட்டுரை எழுதுவோர், வாசிப்போர், நூல் வெளியீடு செய்வோர் தொகை குறைவடைந்துள்ளது. இந்த நிலையிலிருந்து மீண்டெழ வேண்டும் இதற்கு பாடசாலைகள் தான் களமாக அமையவேண்டும்.

யாழ்பாண இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் செயற்பாடுகளை பாராட்டுகின்றேன். தமிழ் மன்றத்தினால் முதன்முறையாக வெளியிடவிருக்கும் "தமிழ் ஆரம்" சஞ்சிகையின் பிரசவம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன். இந் நூலின் மாணவர்களின் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் பெருமளவு இடம்பெறுமென எதிர்ப்பார்கின்றேன். ஆசிரியர்கள், தமிழ் அறிஞர்களது ஆக்கங்களும் மாணவர்களுக்கு வழிகாட்டியாக அமைந்திட வேண்டும். தமிழ் மன்றத்தினால் வெளியிடப்படும் இச்ச ஞ்சிகையானது கல்லூரியினது புகழை ஓங்கிடச் செய்தல் வேண்டும். மாணவர்கள் மத்தியில் புதிய உந்துதலை ஏற்படுத்திட வேண்டும்.

இச்சஞ்சிகையின் உருவாக்கத்திற்கு பொறுப்பாக இருந்த தமிழ் மன்றப் பொறுப்பாசிரியர், மாண வர்கள், நூலாசிரியர் போன்றோருக்கு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. அ. அகிலதாஸ்**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்.



# வாழ்த்துச் செய்தி

**யா**ழ்ப்பாண வலயத்தின் புகழ் பூத்த பாடசாலைகளில் ஒன்றான யாழ் இந்து மகளிர் கல்லூரி முதன் முறையாக "தமிழ் ஆரம்" என்ற சஞ்சிகையை வெளியிடுவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. தமிழுக்கு ஆரமாக அமைந்துள்ள இந்தச் சஞ்சிகை மாணவர்களது பல ஆக்கங்களை கொண்டு வருவது மாணவர்களின் மொழி ஆளுமையை வளர்ப்பதாக அமைகின்றது. இது காலத்தின் தேவையாகவும் கட்டாயமாகவும் காணப்படுகின்றது. மொழித்திறன் விருத்தி, படைப் பாக்கத் திறன் ஆகியவை குறைந்து வரும் இக்காலகட்டத்தில் இந்தச் சஞ்சிகை வெளிவருவது பாராட்டுதற்குரியதாகும்.

**"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு"**

என்ற வள்ளுவர் குறளிற்கு அமைவாக மணலிலே கேணி தோண்டும் அளவிற்கு நீர் ஊறும் அதேபோல் கற்க கற்க அறிவும் பெருகும். எனவே அறிவு பெருகும் வகையில் படைப்பாற்றல் திறனை வளர்க்கும் வகையில் இந்தச் சஞ்சிகை வெளிவருகின்றமை அனைத்து தமிழ் மாணவர்களுக்கும் ஒரு வழிகாட்டியாகும்.

இந்தச் சஞ்சிகை மேன்மேலும் கல்லூரி அன்னையின் மடியில் தவழ்ந்து நூறாவது சஞ்சிகையையும் காணவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திருமதி மீரா அருள்நேசன்.**
உதவிக் கல்விப் பணிப்பாளர், (தமிழ்)
யாழ்ப்பாணம்



## மன்றப் பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி

**யா**ழ் இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றத்தினரால் "தமிழ் ஆரம்" முதல் மலராக மலர்வதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். கலைப்பிரிவு உயர்தர மாணவிகளின் பெரு முயற்சியால் மாணவர்களது ஆக்கத்திறன்களை தமிழ் ஆரமாக வெளிக்கொணர்வதை எண்ணி அக மகிழ்வடைகின்றேன்.

வருடம்தோறும் நடைபெறும் தமிழ் மொழித்தினப் போட்டிகளில் எமது மாணவர்கள் பாடசாலை, கோட்டம், வலயம், மாகாணம், தேசியம் என்ற ரீதியில் அரிய பல சாதனைகளைப் புரிந்து வருகின்றனர். இத்தகைய எமது மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் இம்மலரை வெளியிடுவதற்கு முன்வந்த மாணவிகளின் பேராற்றலைப் பாராட்டுவதோடு இம்மலரானது இனிவரும் காலங்களிலும் ஆண்டுதோறும் மலரவேண்டும் என எல்லாம் வல்ல நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகரின் அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி பத்மாவதி தாமோதரகுமார்**
மன்றப் பொறுப்பாசிரியர்



# தலைவரின் பார்வையில்...

**யா**ழ் மாவட்டத்தில் முன்னணி பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் எமது இந்து மகளிர் கல்லூரியின் தமிழ் மன்றம் முதன்முதலாக "தமிழ் ஆரம்" என்ற சஞ்சிகை ஒன்றினை வெளியிடுகின்றது. இச்சஞ்சிகையை வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்திய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் இம் மன்றத்தின் தலைவர் என்ற வகையில் முதற்கண் நன்றி தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

கன்னி முயற்சியாக வெளிவரும் இச் சஞ்சிகை எல்லோரும் விரும்பும் வகையில் நல்ல படைப்புக்களை உள்ளடக்கி, கருத்தாழமும் கனதியும் மிக்கதாக அமையவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகவும், பிரார்த்தனையாகவும் அமைகின்றது. எமது இவ் வெளியீடு இவ்வருடத்துடன் நின்றுவிடாது எதிர்காலத்திலும் தொடர்ந்து வெளிவர வேண்டும். எமக்குப் பின்னே வளரப் போகின்ற மாணவர் சமூகம் இத் தமிழ் மன்றத்தின் ஊடாக இப்பணியை முன்னெடுத்துச் செல்லும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும். அதுவே எனது ஆவலுமாகும். மேலும் இச் சஞ்சிகை தமிழ் ஆர்வம் மிக்க அனைவரது கரங்களிலும் சென்றடைய வேண்டும். அப்போதுதான் இதன் பெறுமதி பற்றிய பிரதிபலிப்பை எம்மால் அறியமுடியும். அது எதிர்காலத்தில் மேலும் எம்மை உயர்த்திச் செல்வதற்கான உந்து தலைத் தரும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

அத்துடன் குறுகிய காலத்தில் "தமிழ் ஆரம்" என்ற இச்சஞ்சிகை வெளிவருவதற்கு உரிய ஆக்கங்களை தந்துதவியோருக்கும் இச் சஞ்சிகைக்கு அழகிய வடிவம் கொடுத்து கவர்ச்சியாக அச்சிட்டுத் தந்துதவிய "அன்றா" அச்சகத்தினருக்கும், இச் சஞ்சிகைக்கான நிதி உதவியை வழங்கிய அனைத்து நல்உள்ளங்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக எம்மை நெறிப்படுத்தி நின்ற ஆசிரியப் பெருந்தகையினருக்கும் மாணவர் மன்றத்தில் தலைவர் என்ற வகையில் உணர்வுபூர்வமான நன்றிகளைத் தெரிவித்து "தமிழ் ஆரம்" சஞ்சிகை பொலிவு பெற்று சிறப்புற வெளிவர மனம் நிறைந்த வாழ்த்துக்களை மலர்க்குழுவினருக்கும் தெரிவித்துக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

"வாழ்க எம் தமிழ் மன்றம்
வளர்க அதன் நற்பணி"

**செல்வி மதிவதனி குருச்சந்திரநாதன்**

தமிழ் மன்றத் தலைவர்.



# இதழாசிரியர்களின் இதயத்திலிருந்து..



பண்பாடி கலை வளர்க்கும் யாழ் மண்ணிலே ஒளியாகத் திகழும் எமது கல்லூரியின் தமிழ் மன்றத்தினரின் முயற்சியினால் "தமிழ் ஆரம்" எனும் மலர் மலர்கின்றது. வைரம், இரத்தினம், முத்து, மாணிக்கம் எனப் பல்வேறு பட்ட மணிகள் கோர்த்து அமையப்பெறும் ஆரம் போல தமிழ் மொழியில் பல்வேறு சுவைகளையும் ஒருங்கே தாங்கி வரும் ஒரு சிறப்பான நூலாக "தமிழ் ஆரம்" திகழவேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

"தடைதாண்டி முன்னேறு தளராமல் செயற்படு" என்பதற்கிணங்க எமது இந்நூலும் பல தடைகளைத் தாண்டி தமிழ் மன்றத்தின் முதல் நூலாக வெளிவருகின்றது. ஆகேவே இதிலுள்ள குறைகளை தயைகூர்ந்து மன்னிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் இந்நூலினை வெளியிட ஆலோசனை வழங்கி அனுமதி தந்த கல்லூரி முதல்வர், தமிழ்ப்பாட இணைப்பாளர், மன்றப்பொறுப்பாசிரியர்கள், தமிழ் துறை ஆசிரியர்கள் அனைவருக்கும் இதழாசிரியர்கள் என்ற ரீதியில் மனமார்ந்த நன்றிகளை கூறுகின்றோம்.

"எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே"

**ஜனனி ஜயாத்துரை**
**ஹாயத்திரி சண்முகநாதன்**
இதழாசிரியர்கள்.



## செயலாளரின் உள்ளத்திலிருந்து...

இந்துப் பண்பாடுகளை தன்னகத்தே கொண்டு மிளிரும் எமது கல்லூரி தமிழ் மன்றத்தின் "தமிழ் ஆரம்" முதலாவது இதழை பல கஸ்டங்களின் மத்தியில் அழகாக விரிக்கின்றது.

எமது மன்ற உறுப்பினர்களின் பெருமுயற்சியினாலும், பொறுப்பாசிரியர்களின் உந்துதலினாலும் வெளிவரும் இம் மலரானது ஆண்டுதோறும் மலரும் என்பதில் சந்தேகமில்லை. எமக்கு இந்நூலை வெளியிடுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய மன்றப் பொறுப்பாசிரியருக்கும், ஆசிச் செய்தி, வாழ்த்துச்செய்தி வழங்கிய நல் இதயங்களுக்கும், விளம்பர அனுசரனை வழங்கி ஆதரவு நல்கியோருக்கும் இந்நூலை அழகுற வடிவமைத்த "அன்றா" நிறுவனத்தாருக்கும் மன்றத்தின் சார்பில் எமது மனமுவந்த நன்றிகள்.

**செல்வி கோபினா ரகுமாறன்**
தமிழ் மன்றச் செயலாளர்.

# யாழ் இந்து மகளிர் கல்லூரி
# தமிழ் மன்றம் - 2014

| | |
|---|---|
| காப்பாளர் | :- திருமதி மிமலாதேவி விமலநாதன் |
| பொறுப்பாசிரியர் | :- திருமதி பத்மாவதி தாமோதரகுமார் |
| தலைவர் | :- செல்வி மதிவதனி குருச்சந்திரநாதன் |
| உபதலைவர் | :- செல்வி விதுசனா சண்முகராசா |
| செயலாளர் | :- செல்வி கோபினா ரகுமாறன் |
| உப செயலாளர் | :- செல்வி டிலக்ஷியா மகேந்திரராஜா |
| பொருளாளர் | :- செல்வி ஜனனி சிவகுமார் |
| உப செயலாளர் | :- செல்வி பிரியங்கா சிவசண்முகராஜா |
| இதழாசிரியர் | :- செல்வி ஜனனி ஐயாத்துரை |
| உப இதழாசிரியர் | :- செல்வி ஹாயத்திரி சண்முகநாதன் |
| **ஆசிரிய ஆலோசகர்கள்** | :- திருமதி கே. ஆனந்தரட்ணம் |
| | :- திருமதி ச. செபமாலைதாசன் |
| | :- திருமதி க. தனமூர்த்தி |
| | :- திருமதி கி. நித்தியானந்தன் |
| | :- திருமதி செ. உமாகரன் |
| | :- திருமதி ரா. தேவராஜா |
| | :- திருமதி ர. பிரதீபன் |
| **மலர்க்குழு** | :- செல்வி டிலக்ஷியா மகேந்திரராஜா |
| | :- செல்வி ரூபினி இராஜகுலசிங்கம் |
| | :- செல்வி சக்தி சிவராசா |
| | :- செல்வி மதுரா நாகேந்திரம் |
| | :- செல்வி லக்ஷனா உதயராஜ் |
| | :- செல்வி சர்மிளா புஸ்பராசா |

# முத்தமிழ் குழுமம்




**இருப்பவர்கள்( இட.வ) :** திருமதி இ. நித்தியானந்தன், திருமதி சி. பாக்கியராஜா. திருமதி கு. உருத்திரகுமார், திருமதி ச. சிவகுமார், திருமதி ரோ. பாலஸ்கந்தன், திருமதி மி. விமலநாதன் (அதிபர்), திருமதி ல. லிங்கேஸ்வரன், திருமதி ப. தாமோதரகுமார், திருமதி கே. ஆனந்தரட்ணம், திருமதி ச. செபமாலைதாசன்.

**நிற்பவர்கள் (இட.வ) :** திருமதி க. சிவனேஸ்வரநாதன், திருமதி க. தனமூர்த்தி, திருமதி கி. தர்சிகன், திருமதி ரா. தேவராஜா, திருமதி பி. வாகீசன், திருமதி சா. மதிரூபன், திருமதி பா. கேதீஸ்வரன், செல்வி த. கிட்ணமூர்த்தி, திருமதி செ. உமாகரன், திருமதி ர. பிரதீபன், திருமதி ச. ரதிதரன்.

# மலர்க்குழு - (2014)



**இருப்பவர்கள்( இட.வ) :** திருமதி ச.செபமாலைதாசன், திருமதி ரோ.பாலஸ்கந்தன் (பிரதி அதிபர்), திருமதி மி.விமலநாதன் (அதிபர்), திருமதி ல.லிங்கேஸ்வரன் (பிரதி அதிபர்), திருமதி ப.தமோதரகுமார் (மன்றப் பொறுப்பாசிரியர்).

**நிற்பவர்கள் (இட.வ) :** செல்வி இ.ரூபினி, செல்வி பு.சர்மிஜா, செல்வி சி.சக்தி, செல்வி ம.டிலக்ஷியா, செல்வி ஜ.ஜனனி (இதழாசிரியர்), செல்வி ச.ஹாயத்திரி (உப இதழாசிரியர்), செல்வி நா.மதுரா, செல்வி உ.லக்ஷனா.

# தமிழ் மன்றம் - (2014)



**இருப்பவர்கள்(இட.வ) :** திருமதி ரோ. பாலஸ்கந்தன் (பிரதி அதிபர்),செல்வி கு. மதிவதனி (தலைவர்), திருமதி மி. விமலநாதன் (அதிபர்), செல்வி ர. கோபினா (செயலாளர்), திருமதி ல. லிங்கேஸ்வரன் (பிரதி அதிபர்), திருமதி ப. தாமோதரகுமார் (மன்றப் பொறுப்பாசிரியர்).

**நிற்பவர்கள் (1ம் வரிசை) (இட.வ) :** செல்வி வா. தாட்சாயினி, செல்வி செ. வைஷ்ணவி, செல்வி இ. ரூபினி, செல்வி ம. பிரியவதனா,செல்வி இ. தனரோயினி,செல்வி க. லக்ஷனா, செல்வி ஜீ. அர்ச்சனா, செல்வி சி. அகல்யா, செல்வி சி. ஜனனி, செல்வி ச. விதுசனா (உபதலைவர்), செல்வி பு. சா்மிஜா, செல்வி ச. ஹாயத்திரி (உப இதழாசிரியர்).

**நிற்பவர்கள் (2ம் வரிசை) (இட.வ) :** செல்வி த. நிரோஜா, செல்வி ரா. கீர்த்தனா, செல்வி செ. கனிஸ்ரா, செல்வி சி. சக்தி, செல்வி ச. சாம்பவி, செல்வி ம. டிலக்ஷியா, செல்வி க. தர்மிளா, செல்வி உ. லக்ஷனா, செல்வி சி. பிரியங்கா, செல்வி ஐ. ஜனனி (இதழாசிரியர்), செல்வி நா. மதுரா,செல்வி ஜீ. அபிராமி

# தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் - 2014

| இல. | நிகழ்ச்சி | பிரிவு | மாணவர் பெயர் | கோட்ட மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | இலக்கணப் போட்டி | 5 | மயூரங்கா. பா | 2 | - | - |
| 02 | திறனாய்வுப் போட்டி | 5 | சிந்துஜா. பி | 1 | 1 | 1 |
| 03 | கவிதை | 4 | அர்ச்சனா.ச | 2 | - | - |
| 04 | கவிதை | 5 | சர்மியா. பு | 2 | - | - |
| 05 | சிறுகதை | 5 | ஸ்ரீகௌரி. ஜெ | 1 | - | - |
| 06 | பேச்சு | 5 | தனரோஜினி. இ | 2 | - | - |
| 07 | பாவோதல் | 2 | தேனுசா. சி | 1 | 2 | - |
| 08 | பாவோதல் | 3 | ஹரிஸ்யந்தி. ச | 3 | - | - |
| 09 | பாவோதல் | 4 | கம்சாயினி. ந | 2 | - | - |
| 10 | பாவோதல் | 5 | ஜனனி. ஐ | 2 | - | - |
| 11 | இசை - தனி | 3 | அருந்ததி. ச | 2 | - | - |
| 12 | இசை - தனி | 5 | வர்ணிகா. தி | 2 | - | - |
| 13 | இசை - குழு | 1 | - | 1 | 1 | 2 |
| 14 | இசை - குழு | 2 | - | 2 | - | - |
| 15 | நடனம் - தனி | 2 | நிவேதனா. பி | 1 | 1 | 1 |
| 16 | நடனம் - தனி | 3 | யுவலக்சி. மோ | 1 | 1 | 1 |
| 17 | நடனம் - தனி | 4 | துவாரகா. ச | 2 | - | - |
| 18 | நடனம் - தனி | 5 | கம்சவாகினி. ம | 1 | 1 | 3 |
| 19 | நடனம் - குழு | 1 | - | 1 | 1 | 1 |
| 20 | நாட்டிய நாடகம் | தி.போ | - | 1 | 2 | - |
| 21 | நாட்டார் பாடல் | தி.போ | - | 1 | 2 | - |

# பொருளடக்கம்

01. பழந்தமிழ் இலக்கியங்களும் தமிழர் வாழ்வியல் அம்சங்களும்... 01
02. திருக்குறள் முத்து ........ 07
03. மாணவரும் வாசிப்புத் திறனும்........ 08
04. சங்ககால பெண்ணியம்........ 10
05. சந்தையில் நான் கண்ட காட்சிகள் ........ 13
06. நாட்டார் பாடல்களின் தனிச்சிறப்பு ........ 15
07. இயற்கை தரும் இன்பம் ........ 16
08. தமிழ் மொழியின் தொன்மையும் சிறப்பும்........ 17
09. வாசுவின் தியாகம் ........ 20
10. சர்வதேச அரங்கில் பெண்கள் ........ 22
11. பெண்மை ........ 24
12. தனிநாயகம் அடிகளாரின் அளப்பரிய தமிழ்ப்பணி........ 25
13. கிளர்ந்தெழ வேண்டியவர்கள் பெண்களே!........ 27
14. உயர்தல் ஆவது உண்மையே ........ 29
15. நிகழ்காலத் தோல்விகளே எதிர்கால வெற்றிகள் ........ 30
16. தந்தை,தாய் பேண்........ 32
17. ஆசான்........ 34
18. அன்பின் மகிமை ........ 35
19. நான் ஒரு வைத்தியர் ஆனால்........ 37
20. இயற்கை ........ 38
21. விஞ்ஞானமும் மனித வாழ்வும் ........ 39
22. வெகுசனத் தொடர்பு சாதனங்களால் நிகழும் நன்மை தீமைகள் ..... 42
23. நினைவுகளே........ 45
24. இலக்கியங்களில் பெண் ........ 46
25. மொழிப்பெருமை காப்போம்...! ........ 49
26. தமிழ்ச் சமூகத்தின் தொடக்க காலத் தகவல்
தொடர்பு முறைமைகள் ........ 51

# பழந்தமிழ் இலக்கியங்களும் தமிழர் வாழ்வியல் அம்சங்களும்

*“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கு”*

என்பதற்கமைய தமிழராய் பிறந்த ஒவ்வொருவருடைய வாழ்வும் வளமும் தமிழ் மொழி சார்ந்தே அமைந்துள்ளது. “அரிது அரிது மானிடராதல் அரிது” என்றார் ஔவைப் பாட்டி. ஆம் கிடைத்தற்கு அரிய பிறப்பாகிய மானிடப்பிறவியினை எடுத்துள்ள எம்மை வாழ்நாள் முழுவதும் மனிதப் பண்புகளுடன் வாழவைப்பது தமிழ்மொழி இயம்பிடும் வாழ்வியல் அம்சங்களே ஆகும். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மொழியென நம்தமிழ்மொழி சிறப்பிக்கப்படுகின்றது. இதன் தோற்ற காலகட்டத்திலேயே தமிழ்மொழியில் சில இலக்கியங்கள் தோற்றம் பெறத் தொடங்கின. இவ்வாறு தோற்றம் பெற்ற தமிழின் ஆரம்பகால இலக்கியங்களும் இவ் இலக்கியங்களை பின்பற்றி எழுந்த பிற்கால இலக்கியங்களும் தமிழரின் வாழ்வினை சிறப்புற எடுத்துரைப்பதுடன் தமிழர் வாழ்வு எத்தகையதாக அமையவேண்டும் என்பதையும் செப்பிடுகின்றன. அந்தவகையில் மக்களது வாழ்வியல் அம்சங்களை செவ்விய சொற்களால் வெளிப்படுத்து கின்ற பழந்தமிழ் இலக்கியங்கள் தமிழரின் ஆதிகாலமான சங்ககாலம் முதல் இன்றுவரை மனி தருள் தமிழர் பின்பற்ற வேண்டிய வாழ்க்கை நெறிகளையும் விலக்கவேண்டிய பண்புகளை யும் தெளிவாகக் கூறிடும் பெரும் பொக்கிசங்களாக அமைகின்றன.

“பேர்படைத்த தமிழர் தாங்கள் முன்னெடுத்த பாதங்கள்
பின்னெடுத்து வைத்திடாத பெருமைபாடி வருகவே!”

இத்தகைய பெருமைகளை உடைய தமிழர் தம் வாழ்வில் அன்பு, கருணை, ஒழுக்கம், கல்வி, உண்மைத்தன்மை, பஞ்சமாபாவங்களில் இருந்து விலகி இருக்கும் தன்மை போன்ற நல் வாழ்வியல் அம்சங்களை பெற்றிருக்கவேண்டும் எனப் பழந்தமிழ் இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. இதன்படி இவை கூறிடும் வாழ்வியல் அம்சங்களைப் பின்பற்றி அவ்வாழ்க்கை நெறியில் பயணம் செய்யும் இயல்பினைக் கொண்டவனே உண்மையான தமிழர் என பழந்தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.

இவ்வகையில் தமிழ்மொழியின் பழந்தமிழ் இலக்கியங்கள் எனும் வரிசையில் ஐம்பெரும்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள் என்பனவும், சங்கமருவிய காலத்தில் தோற்றம்பெற்ற அற இலக்கியங்களான திருக்குறள், நாலடியார், நான் மணிக்கடிகை போன்றனவும் பல்லவர்கால பக்தி இலக்கியங்களும் வடமொழியில் தோன்றி தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட இதிகாசங்களான இராமாயணம், மகா

பாரதம் என்பனவும் தமிழர் வாழ்வு எவ்வாறு அமையவேண்டும் என்பதையும் தமிழரின் வாழ்க்கை முறையினை வலியுறுத்தும் விதத்தினையும் நோக்குவோமாயின்:

சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவக சிந்தாமணி ஆகிய ஐந்து பேரிலக்கியங்களையும் தமிழ்மொழியின் ஐம்பெருங்காப்பியங்கள் என்பர். அறம் பொருள், இன்பம், வீடு போன்ற நாற்பதங்களை உள்ளடக்கியவையாக இவ் இலக்கியங்கள் அமைந்துள்ளன. பெண்கள்அணியும்ஆபரணங்களைதங்களது நாமங்களாகக்கொண்டுள்ள இவ் இலக்கியங்கள் பெண்ணின் வாழ்க்கை எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பதை யும் அவள் வாழ்ந்து காட்டும் வழியில் எவ்வாறு உலகம் வளரும் என்பதையும் புலப்படுத்து பவையாக அமைந்துள்ளன. இதைவிட மனிதன் தனது வாழ்க்கையில் இணைத்துக் கொள்ளவேண்டிய பண்புகளையும் விலத்திக்கொள்ள வேண்டிய பண்புகளையும் வலி யுறுத்துகின்றன. உதாரணமாக சிலப்பதிகாரத்தில் பின்வரும் மூன்று வாழ்வியல் அம் சங்கள் கூறப்படுகின்றன.

“ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்”
அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்”
“கற்புடை மகளிரை உயர்ந்தோர் போற்றுவர்”

என்பனவற்றை “தேனிலே ஊறிய செந்தமிழ் சுவை தேரும்” சிலப்பதிகாரம் வலி யுறுத்துகின்றது. அத்துடன் மணிமேகலை என்ற காப்பியத்தில் அறம் என்பது யாது? அறம் செய்வோரின் வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்பதனையும் அறவாழ்வில் அடையும் மேன்மையினையும் பின்வரும் பாடல் ஊடாக புலப்படுத்துகின்றனர்.

“ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்”
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்நெறி வாழ்க்கை
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே...” என்பதன் ஊடாக அறியலாம்.

மேலும் திருக்குறள், நாலடியார் போன்றனவும் தமிழர் வாழ்வியல் அம்சங்களை கூறிடும் பழந்தமிழ் இலக்கியங்களாக அமைந்துள்ளன. இதனாலேயே வே. சாமிநாதையர் “நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி” என்கின்றார். திருவள்ளுவரால் அருளப் பட்ட திருக்குறள் எனும் மகா சமுத்திரத்தில் தமிழர் வாழ்வு ஈரடி வெண்பாவில் கூறப்பட் டுள்ளது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற பிரிவுகளைக் கொண்ட இவ் இலக்கியத்தில் மனிதனது வாழ்க்கை நெறியினைப் பல்வேறு அதிகாரங்க ளில் கூறியுள்ளார். அவற்றில் இல்வாழ்க்கை, அன்புடைமை, ஒழுக்கம், கல்வி போன்ற வாழ்வியல் அம்சங்களை எடுத்துக்காட்டுக்களாக முன்வைக்கலாம்.

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது” (இல்வாழ்க்கை)

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" (அன்புடைமை)

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி" (ஒழுக்கம்)

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக" (கல்வி)

"வானுக்குச் செங்கதிர் ஒன்று - புனல் வன்மைக்கு காவிரி ஒன்று - நல்ல மானத்தைக் காத்து வாழ் என்னும் இந்த வையத்திற்கு ஒன்று திருக்குறள்" என்ற பாரதிதாசனின் வாக்கிற்கு அமைய தமிழர் வாழ்வுக்கு இலக்கணம் திருக்குறளாகும்.

பதுமனாரால் தொகுக்கப்பட்ட நாலடியார் என்ற பழந்தமிழ் இலக்கியமும் தமிழர் வாழ்வியல் அம்சங்களை பிரதிபலிக்கின்றது. நான்கு அடிகளில் தமிழரின் வாழ்வுக்கான வழிகாட்டலை கூறிடும் இந்நூலில் இருந்து ஒரு பாடலடியினை உதாரணமாகக் கொள்வோம்.

"உறுபுலி ஊனிரை இன்றி ஒருநாள்
சிறுதேரை பற்றியும் தின்னும் - அறிவினால்
காற்றொழில் என்று கருதற்க,
கையினால் மேற்றொழில் ஆங்கே மிகும்"

செய்யும் தொழிலே தெய்வம் என்ற கருத்தினை வலியுறுத்துவதோடு தமிழரின் மேலான வெற்றியான முயற்சியினைக் கூறுவதன் ஊடாகவும் எம் இனத்தாரின் வாழ்வினை மேம்படுத்துவதாக அமைகின்றது.

அடுத்து நான்மணிக்கடிகை என்ற பழந்தமிழ் இலக்கியமும் தமிழரின் வாழ்வியலுக்கான அடிப்படை அம்சங்களை விளக்குபவையாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக

"இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளண்மை குற்றம்
கிளைஞரில் போழ்தில் சினம் குற்றம் குற்றம்
தமரல்லார் வையகத்து ஊண்"

என்ற பாடலில் மனிதன் செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டுவதன் ஊடாக இனியும் ஒருவன் இக் குற்றங்களை செய்ய முயல்வதை தடுத்து சிறந்த வாழ்க்கை நெறியை பின்பற்ற துணைபுரிகின்றது.

மேலும் பல்லவர்காலத்து பக்தி இலக்கியங்களை நோக்கினால் இங்கு அடியவர்களுக்கு பக்திப்பாடல்களின் ஊடாக இறையருளைப் போதிப்பதனோடு தமிழர்களது வாழ்வியல்

அம்சங்களையும் போதிப்பவையாக அமைகின்றன. நால்வர் தேவாரங்கள், திருமந்திரம், ஆழ்வார்களது பாசுரங்கள் பலவற்றிலும் இவ்வாறான பழந்தமிழ் இலக்கியங்களின் வாழ்வியல் அம்சங்கள் புகுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக திருமந்திரப் பாடல் ஒன்றில் மனிதப்பண்பும் தமிழர் வாழ்வும் கூறப்படுவதனை நோக்கலாம்.

"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"

அவ்வகையில் எல்லாத் தர்மங்களையும் செய்ய இயலாதோர் ஈற்றில் இன்சொல்லை பேசுவதே தர்மங்களில் சிறந்தது என மானிட உலகிற்குக் கூறும் திருமந்திரம் தமிழர் வாழ்வியல் அம்சத்தினை வெளிப்படுத்தும் ஒரு பழந்தமிழ் இலக்கியமாகும்.

இவற்றுடன் வடமொழியில் தோன்றி தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பழந்தமிழ் இலக்கியங்களான மகாபாரதம், இராமாயணம் என்பனவும் தமிழர் வாழ்வுக்கான அடித்தளத்தை இடுகின்றன. இவ் இரு இலக்கியங்களும் அறத்தின் மேன்மையினையும், தர்மமே என்றும் தலை நிமிர்ந்து நிற்கும் என வலியுறுத்துவதன் ஊடாக தமிழரது வாழ்வானது தர்மத்தின் வழி தொடர வழிசமைக்கின்றன. தமிழர் வாழ்வியல் அம்சங்களான ஒருவனுக்கு ஒருத்தி, பஞ்சமாபாவங்களில் இருந்து விடுபட்ட வாழ்வு, தாய், தந்தை, குரு, தெய்வம் போன்றோரை வழிபட்டும் மதித்தும் வாழும் வாழ்க்கை, செய்நன்றி மறவாமை போன்ற சீரிய பண்புகள் இவ் இரு இலக்கியங்கள் ஊடாகவும் புகட்டப்படுகின்றன. அத்துடன் இவ் இரு இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு இலக்கியப் பாத்திரங்களினது வாழ்க்கை முறையும் அவ்வாழ்க்கை நெறியின் இறுதிநிலையில் நிலைபெறும் அறங்களும் தமிழர்களின் வாழ்வு சிறப்புற அமைய வழிசமைக்கின்றன. எடுத்துக்காட்டாக கம்பராமாயணத்தில் இராமன் - இராவணன் போரின்போது இராமன் பின்பற்றும் போரியல் பண்பானது இராமனது பண்பினை வெளிப்படுத்துவதோடு நின்றுவிடாது தமிழர் வாழ்விலும் அத்தகைய பண்பினை வளர்த்துக்கொள்ள துணைபுரிகின்றது.

"ஆளையா உனக்கமைந்தன மாருதம் அறைந்த
பூளையாயின; கண்டனை; இன்று போய் போர்க்கு
நாளைவாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்"

என்ற பாடலினூடு அறிந்துகொள்ளலாம். அத்துடன் வில்லிபுத்தூராழ்வாரால் மொழிபெயர்க்கப்பட்ட மகாபாரதத்திலும் தமிழரது வாழ்வியல் அம்சங்கள் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. உதாரணமாக பஞ்சபாண்டவர், தாய், தந்தை, குரு,

தெய்வம் என்போர் மீது கொண்ட அன்பும், மரியாதையும், அவர் சொற்படி நடக்கும் வாழ்க்கை முறையும் வெளிப்படுத்தப்படுவதுடன் தர்மத்தை நிலை நாட்ட அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளும் தமிழரது வாழ்வியல் அம்சங்களை பிரதிபலிக்கின்றன. இத்துடன் கர்ணன் என்ற கதாபாத்திரத்தின் செஞ்சோற்றுக்கடன் கழித்தல், கொடைத்தன்மை என்பனவும் தமிழர் வாழ்வியல் அம்சங்களைப் பிரதிபலிப்பவையாக அமைந்துள்ளன எனலாம்.

இவை தவிர பழந்தமிழ் இலக்கியங்களின் வகைகளாகக் கருதப்படுவதும் எழுத்துருவம் பெறாதவையும், இலக்கண நெறிமுறைக்கு அப்பாற்பட்டவையுமாகிய நாட்டார் இலக்கியங்களும் தமிழர் வாழ்வியல் அம்சங்களை வெளிப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக ஏர்ப்பாடல் ஒன்றில்

“பட்டி பெருக வேணும் தம்பிரானே.....
..... வேளாண்மை விளைய வேண்டும் தம்பிரானே
நாடு தழைக்க வேண்டும் தம்பிரானே.....
.... எல்லோரும் வாழ வேண்டும் தம்பிரானே.....

உழவன் தான் மட்டும் வாழாமல் எல்லோரும் இவ் உழவுத் தொழிலினால் வாழவேண்டும் என நினைக்கும் வாழ்வியல் அம்சம் தமிழர் வாழ்வை வளப்படுத்துவதாக அமைகின்றது.

“ஓதிப்படிச்சி
ஊர்புகழ வாழ்ந்தாலும்
ஏழைக்குச் செய்ததீங்கை - அல்லா
எள்ளளவும் ஏற்க மாட்டார்”

ஒரு மனிதன் ஏழைக்கு தீங்கு செய்தால் அதனை இறைவன் மன்னிக்கமாட்டார் எனக் கூறுவதன் ஊடாக மனிதர்களது வாழ்வியல் அம்சம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந் நாட்டார் பாடல் முஸ்லீம் இனத்தை சார்ந்ததாயினும் தமிழில் பாடப்பட்டதால் இது தமிழர்களின் அகத்தில் நீதியை குடிகொள்ளச் செய்து எம்மவர்களின் வாழ்வினை பழந்தமிழ் இலக்கியங்களின் ஊடு செழிக்கச் செய்கின்றன. இவ்வாறு நாட்டார் இலக்கியங்களிலும் தமிழரது வாழ்வியல் கூறப்பட்டுள்ளமையால் பழந்தமிழ் இலக்கியங்கள் தமிழர் வாழ்வில் ஏற்படுத்திய செல்வாக்கினை அறியமுடிகின்றது.

மேற்குறிப்பிட்ட வகையில் அனைத்தினையும் தொகுத்து நோக்குகையில்

“சேரனெங்கோ சிலம்பினும்
சேக்கிளாரின் தெளிவினும்
தேருஞ்சிந்தா மணியினும்
திரிந்து நால்வர் சாரியினும்”

கலந்திருந்த பழந்தமிழ் மொழியினது இலக்கியச் செல்நெறியானது தமிழரது வாழ்க்கைக் கான சிறந்ததொரு வழிகாட்டியாக அமைகின்றன என்பதனையும் இப் பழந்தமிழ்

இலக்கியங்களில் தமிழர் வாழ்வியல் அம்சங்கள் பல புகுத்தப்பட்டும் போற்றப்பட்டும் உள்ளன என்பதும் புலனாகின்றது. மேலும் இப் பழந்தமிழ் இலக்கியங்கள் இயம்பிடும் வாழ்க்கைப் பாதையில் பயணிப்போமாயின் சிறந்த பயனை அடைந்துகொள்ளமுடியும் என்பதும் திண்ணம். அந்தவகையில் காலத்தின் கண்ணாடியாய் விளங்கி தமிழின் அருமை பெருமைகளை அள்ளித்தந்த இப்பழந்தமிழ் இலக்கியங்களின் சிறப்பை உணர்ந்து தமிழர்களாகிய நாமும் இப் பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டிடும் வாழ்வியல் அம்சங்களைப் பின்பற்றி எம் வாழ்வை சிறப்புற அமைத்துக்கொள்வதோடு நின்றுவிடாமல் இவற்றைப் பேணிப்பாதுகாத்து அடுத்துவரும் தலைமுறையினருக்கு கையளிப்போமாக!

“சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே”

**கு. மதிவதனி**
**கலைப்பிரிவு 12B (2015)**

# திருக்குறள் முத்து



**உ**ன்னைக் கடலென்பேன்
உப்புக் கடலன்று
தேன் விளைந்த கடலாகி - அதில்
சிப்பியர் இல்லா முத்துக்களே
சிதறிக் கிடக்கின்றன.

தாய்ப்பாலைக் குடித்தவர்கள்
தடிப்பாகி உடல் உரம் பெறுவர் - உன்
முப்பாலையும் குடித்தவர்கள்
முதலறிவில் உதயம் பெறுவர்

ஆயிரத்து முன்னூற்று முப்பது
அறக்கட்டளைகளை
நூற்று முப்பத்து மூன்று
அதிகாரங்களாய்
பத்துப் பத்துப் படிகளாய்
படியளந்தாய் பார் வேந்தே!

**ப. வாசுகி**
9F

# மாணவரும் வாசிப்புத் திறனும்

"கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல"

என்கிறது நாலடியார். "சில வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவுடைய மாந்தர், கரை துறையற்ற கல்வியை முற்றக் கற்றல் முடியா" என்பது இதன் பொருள். எனினும் பரந்துபட்ட அக்கல்வி யின் சிற்றளவையேனும் கற்றுச் சிந்தையிலிருந்து, அறிவுச் செல்வத்தை சிரத்தையுடன் தேடும்போதே மனிதவாழ்வு செழிப்படைகிறது. மனிதன் மனிதனாகின்றான். இவ்வுண்மை யைத் திருவள்ளுவர்,

"விலங்கொடு மக்க ளனையர் இலங்கு நூல்
கற்றாரோடு ஏனை யவர்"

என ஓர் உவமைமூலம் உணர்த்துகிறார். விழுப்பொருளாங் கல்வியறிவுடையோரே மனிதர் என்றும், அஃதிலார்கள் விலங்குகள் என்றும் விளக்குகிறார். மனிதனை மனிதனாக மாற்றும் சிறப்புடைய கல்வியை பெறுவதற்கு காட்சி, அனுபவம், கேள்வி முதலிய பல வழிகள் உளவேனும் அவற்றுள்ளே தலை சிறந்து விளங்குவன நூல்களே எனக் கூறின் மிகையாகாது. அந் நூல்களும் பொருளுணர்ந்து வாசிக்கும் பழக்கத்தாலேயே பயன்கொள்ளப்படுகின்றன. எனவே, வாசிக்கும் பழக்கமே கல்வியின் ஆணிவேராக, அடித்தளமாக அமைகிறது.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"

என்பது உளவியல் சார்ந்த ஒரு முதுமொழி. இளமைப் பருவத்திலே கற்கும் கல்வியானது, சிந்தாது சிதையாது சிதறாது மனதிலே நன்றாகப் பதியும். எனவேதான், கல்விக்கு அடித்தளமாய் அமையும் வாசிப்புப் பழக்கம் இளமையிலே அரும்பி வளர்ந்து முதிர்ச்சி பெறுதல் வேண்டும். அதனாலேயே புதிய கல்விக் கொள்கையிலே வாசிப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

மாணவர் மொழியாற்றலில் முன்னேற்றம் காண்பதற்கு முதனிலையாகவும், முதன்மை நிலையாகவும் வாசிப்பு அமைகிறது. நூல்களை பிழையற வாசித்தல், கருத்தை விளங்கிக்கொள்ளல், விளங்கிய கருத்தை வெளிப்படுத்தல் ஆகிய முத்திறனும் மொழித்தேர்ச்சியில் அடங்குவன. மாணவர் சிலர் பிழையற வாசிப்பர்; ஆனால் கருத்தை விளங்கிக்கொள்ளார்: அவர்கள் சுவையறியா நாக்கினைப் போன்றவர்கள். சிலர் வாசித்து விளங்கிக் கொள்வார்: ஆனால் விளங்கிக் கொண்டதை வெளிப்படுத்த அறியார்: அவர்கள் கனவு கண்ட ஊமையர் போன்றவர். எனவே, வாசித்து விளங்கி வெளிப்படுத்தும் ஆற்றலே மெய்யான மொழியாற்றலாகும். முறையான மொழியாற்றல் கைவரப் பெற்ற மாணவனின் பேச்சிலே தெளிவும் கருந்தாழமும் காணப்படும். உள்ளங்கை நெல்லிக்கனி போல எந்தக் கருத்தையும் தெளிவாக பிறர் விளங்கிக்

கொள்ளுமாறு உரைப்பான். அவனது எழுத்து நடை எளிமையும் இனிமையும் தெளிவும் கருத்தாழம் வழுவின்மையும் கொண்டதாய் பொலிவுறும்.

பாடசாலையில் பயிலும் பாடங்களோடு மாத்திரம் மாணவனின் கல்வி முற்றுப் பெறுவதில்லை. கரையற்ற கல்வி கடலிலுள்ள சின்னஞ்சிறு துளியே பள்ளியில் பயிலும் கல்வி. அதனால் தான் நம்முன்னோர்கள்.

“கற்றது கைமண்ணளவு
கல்லாதது உலகளவு”

என்று கூறியுள்ளனர். பாடசாலை நூலினால் ஒரு மாணவனது அறிவுவளம் பெருகிவிடும் என எண்ணுவது பகற்கனவு. எனவே மாணவன் பாட நூல்களை கற்பதோடு அமையாது பற்பல நல்ல நூல்களையும் வாசித்தல் வேண்டும். “கண்டதும் கற்க பண்டிதனாவான்” என்பது பழமொழி. நல்லனவெனக் கண்டவற்றை படிக்க வேண்டும் என அப்பழமொழி கூறுகிறது.

வாசிப்புத் திறனிலே தேர்ச்சி பெற்ற மாணவனின் உள்ளம் தணியாத பசி கொண்டதாய் இருக்கும். எத்தனை எத்தனை நூல்களை வாசித்தாலும் அவனது பசி அடங்காது. மணிமேகலை என்னும் காப்பியத்திலே யானைத்தீப்பசி என்னும் நோய் கொண்ட காயசண்டிகை வருகிறாள். அவளுக்கு எவ்வளவு உணவை எந்நேரத்தில் கொடுத்தாலும் உண்பாள்: ஆனால் பசி அடங்காது. ஒவ்வொரு மாணவனுக்கும் காயசண்டிகையைப் போல வாசிப்பில் யானைத்தீப்பசி தோன்ற வேண்டும். அது தோன்றிவிட்டாலே அவனுயர்வுக்கு வித்திடவும் வேண்டுமா! கிணற்றுத் தவளை நிலைபோய், உலகெங்கும் ஓய்வின்றி உலாவிவரும் விநோதமானதொரு பறவையாகி விடுவான். ஆழ்ந்தகன்ற அறிவுடைய மாணவனாவான். அறிவுமாத்திரமன்றி வாழ்வினையும் வாழ்வின் விழுமியங்களையும் புலப்படுத்தும் இலக்கியங்கள், கட்டுரைகள், கவிதைகள் முதலானவற்றைப் படிப்பதால் வாழ்வில் தான் கண்டறியாத புதிய புதிய கதை மாந்தரோடு பழகுகிறான். அவர்களின் குணாதிசயங்களை உணருகிறான் வாழ்வில் பல கோணங்களையும் காணுகிறான்; பலபல புதிய அனுபவங்களை பெறுகிறான்; நல்லன எவை, தீயன எவை எனப் பகுத்துணரும் பண்பு பெறுகிறான்; இதனால் அவனது உள்ளம் விரிவடைகிறது; பண்படுகிறது. எதிர்கால வாழ்வுக்குத் தன்னை ஆயத்தஞ்செய்து கொள்ளும் உன்னத நிலை உண்டாகிறது.

மாணவர்களே எதிர்காலச் சிற்பிகள். எதிர்கால தலைவர்களும் அவர்கள்தாம்: எதிர்கால குடிமக்களும் அவர்கள் தாம். அவர்கள் அறிவுச் செல்வர்களாய், உள்ளத்தால் உயர்ந்தவர்களாய் உருவாக வேண்டுமானால், அவர்கள் வாசிப்புத் திறனை விருத்தி செய்தல் வேண்டும். சுருங்கக் கூறின், வாசிப்புத் திறன் கைவரப்பெற்ற மாணவன் கல்வியென்னும் நீள்வழியில் அரைப்பங்கை கடந்தவனாகின்றான். அன்றியும் முழுமையான மனித வளர்ச்சிக்குத் தன்னைத்தானே ஆயத்தமாக்கியவனுமாகின்றான்.

**பு. மிதூஷா**

**கலைப்பிரிவு 12B (2015)**

# சங்ககால பெண்ணியம்

சமூகத்தின் ஆதிக்க தலைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு பெண்கள் தங்களுடைய உரிமைகளுக்காக போராடும் தன்மையே பெண்ணியம் ஆகும். அதாவது ஆணைப்போல பெண்ணும் தன் எண்ணங்களுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ப சுதந்திரமாக வாழும் வாழ்வியல் முறையாகும்.

பெண்ணியத்தின் தோற்றம் சுமார் அறுநூறு ஆண்டுகால பழமை வாய்ந்தது. பெண்களை துன்புறுத்தும் ஆண்களை எதிர்த்தும், சமூக அங்கீகாரத்தையும், மதிப்பையும் பெறவேண்டும் என்று தோன்றியதே பெண்ணியமாகும். அந்தவகையில் சங்ககால பெண்களின் நிலையை பின்வருமாறு நோக்கலாம்.

**சங்ககாலத்தில் விதவைகளின் நிலை**

சங்ககாலத்தில் கணவனைப் பிரிந்த பெண்கள் தங்களை அலங்கரிக்கும் உரிமையை பெற்றிருக்கவில்லை. அணிகலன்கள், மலர்கள் போன்றவற்றை சூடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

"எம்மினும் பேர் எழில் இழந்து வினை எனப்
பிறர் மனை புகுவல் கொல்லோ
அளியல் தானே பூவிலைப் பெண்டே" என்னும்
புறநானூற்று பாடல் கணவனை இழந்த பெண்களின் நிலையை உணர்த்துகிறது.

**சங்க இலக்கியங்களில் பெண் கல்வி**

வேதகாலத்தைப் போலவே சங்ககாலத்திலும் ஆண், பெண் இருபாலரும் கல்வி கற்று இருந்தனர் என்பதற்கு பெண்பாற் புலவர்களும் அவர் தம் பாடல்களும் சான்றுகளாகும்.

ஔவையார், வெள்ளி வீதியார், காக்கை பாடினியார், ஒக்கூர் மாசாத்தியார், நப்பசலையார், முடத்தாம கண்ணியார், குறமகள் இளவெயினி, பாரி மகளிர், ஆதி மந்தி ஆகிய பெண்களின் பாடல்களை இலக்கியங்களில் இருந்து அறிந்தாலும் ஓதலில் பிரிவு ஆண்களுக்கு மட்டும் இருந்தது என்பதையும் இலக்கியங்கள் வழி அறியலாம்.

**இலக்கியங்களில் ஆண்களுக்கு அறிவுறுத்திய பெண் கவிஞர்கள்.**

ஆண் படைப்பாளிகள் பெண்களுக்கு ஒழுக்கத்தையும் நன்னடத்தையையும் அறிவுறுத்தி இருந்தது போலவே ஔவை என்ற பெண் கவி, ஆண்களுக்கு அறிவுரை

வழங்கி இருப்பது பெண்மையின் இலக்கிய ஆளுமைக்கு சிறந்த சான்றாகும். உதாரணமாக ஔவையாரின் பின்வரும் பாடலினை குறிப்பிடலாம்.

'நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

**சங்க இலக்கியத்தில் களவும் கற்பும்**

சங்ககாலத்து பெண்கள் காதல் சுதந்திரமும் திருமண சுதந்திரமும் பெற்று இருந்தார்கள். இதற்கு களவு, மணம், உடன்போக்கு போன்ற பல ஆதாரங்கள் உள்ளன. குறுந்தொகையில் அறிமுகம் இல்லாத தலைவனும் தலைவியும் இயற்கைப் புணர்ச்சியில் இணைந்து களவு மணம் புரிந்திருக்கிறார்கள். இதனை பின்வரும் குறுந்தொகைப் பாடல் விளக்குகின்றது.

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புல பெயர்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"

**சங்க இலக்கியங்களில் விருந்தோம்பலும் பெண்ணும்**

சங்ககாலத்தில் விரும்தோம்பலானது பெண்ணுக்குரிய தலையாய கடனாகக் கருதப்பட்டது. பொழுது பாராமல் எல்லா நேரங்களிலும் பெண் விருந்தோம்பினாள் என்பதை நற்றிணை பாடல் ஒன்று சாட்சி அளிக்கின்றது.

"வானிகுபு சொரிந்த வயங்குபெயல் கடைநாள்
பாணி கொண்ட பல்கால் மெல்லுறி
ஞெலிகோல் கலப்பை அதளொடு சுருக்கிப்
பறிப்புறத்து இட்ட பால்நொடை இடையன்
நுண்பல் துவலை ஒரு திறம் நனைப்பத்
தண்டுகால் வைத்த ஒடுங்குநிலை மடிவிளி
சிறுதலைத் தொழுதி ஏமார்ந்து அல்கும்
புறவி னதுவே பொய்யா யாணர்
அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறமகள் உறைவின் ஊரே"

**சங்க இலக்கியங்களில் ஆண் பெண் உறவு நிலை**

வரைவின் மகளிர் என்று பெண்கள் அடையாளப்படுத்தலில் இருந்து சங்ககாலத்து பெண்களின் அடிமைத்தனத்தை உணர்ந்துகொள்ளமுடிகிறது. ஆனால் பரத்தையிடம் இன்பம் நுகர்ந்து திரும்பும் தலைவனைப் பார்த்து "இம்மை மாறி மறுமையாகினும் நீ யாகியர் என் கணவனை யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே" என்று சொல்வதிலிருந்து ஒருத்திக்கு ஒருவன் என்று பெண்ணை மட்டுமே அக்கால சமூகம் வாழப் பழக்கி இருக்கிறது என்பதை அறியமுடிகிறது.

**சங்க இலக்கியங்களில் போர்களும் பெண்களும்**

போருக்கான வீர மறவர்களை ஈன்று புறந்தருதலே பெண்களின் கடமையாகக் கருதப்பட்டது.

வினையே ஆடவர்க்கு உயிரே - வாள்நுதல்

மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என

நமக்கு உரைத்தோரும் தாமே

அழா - அல் தோழி அழுங்குவர் செலவே

என்னும் குறுந்தொகைப் பாடல் குடும்பத்தில் பெண்களின் உழைப்பு சுரண்டப் பட்டிருப்பதையும், ஆடவரை உயிராக கொண்டு வாழ வேண்டும் என்று கட்டாயப் படுத்தப்பட்டு இருப்பதையும் அறிவிக்கின்றது.

உசாத்துணைப் பகுதி :

தமிழ் மதி, சங்ககாலம் தொடக்கம் தற்காலம் வரையான பெண்ணியம்.

**ச. ஹாயத்திரி**

**கலைப்பிரிவு $12^B$ (2015)**

# சந்தையில் நான் கண்ட காட்சிகள்

**ச**ந்தை கூடும் நாட்களிலே சனிக்கிழமை முக்கியம் வாய்ந்தது. சென்ற சனிக்கிழமை நானும் தந்தையுடன் சுன்னாகச் சந்தைக்கு சென்றிருந்தேன். சுன்னாகச் சந்தை ஒரு நாளங்காடி. ஆதலால் அதிகாலையிலேயே சந்தை கூடுவதற்கான அறிகுறிகள் பல அங்கு தோன்றின.

நாற்றிசை வீதிகளிலும் ஜல்ஜல் என சதங்கை ஒலி கேட்கிறது. யாரேனும் நாட்டிய மகளிர் நடனம் ஆடிக்கொண்டு வருகிறார்களா? என்று ஐயம் ஏற்பட்டது. கழுத்திலே சலங்கை கட்டப்பட்ட காளை மாடுகள் வெகுசாதாரணமாக வண்டிகளை இழுத்து வந்தன. அவ் வண்டிகளிலே விவசாயிகளின் உற்பத்திப் பொருட்கள் குவிந்து கிடந்தன. அந்த விவசாயிகளின் முகத்திலே தாங்கள் விளைவித்த பொருட்களின் பயனை அனுபவிக்கப்போகும் மகிழ்ச்சி காணப்பட்டது.

இன்னொரு பக்கத்தில் ஆண்களும் பெண்களும் அணிஅணியாக தலையிலே கடகங்களை சுமந்துகொண்டு வந்தார்கள். அக்கடகங்களில் இருந்து காய்கறிகள் எட்டிப்பார்த்துச் சிரித்தன. அக்காட்சி கோயிற் திருவிழாவிலே ஆடி அசைந்து வரும் காவடிக் கூட்டங்களை நினைவுக்கு ஊட்டியது.

சைக்கிள் வண்டிகள் "கிணிங் கிணிங்" என மெல்லிசை பாடிக்கொண்டு இடதுசாரி, வலதுசாரியாக வந்தன. அவைகளும் ஏதேதோ சுமந்து வந்தன. சந்தையை வந்தடைந்த பொருட்கள் எல்லாம் அவை அவை விற்கப்படும் இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு குவிக்கப்பட்டும் பரப்பப்பட்டும் கண்கொள்ளாக் காட்சி அளித்தன.

வாழைச்சருகு மெத்தையிலே வாழைக்குலைகள் அணி அணியாக ஒய்யாரமாக படுத்திருந்தன. அவற்றில் பழுத்த பொன் நிறக் குலைகள் சிரித்தன. செங்காயான பழக்குலைகள் சிரிக்கமுயன்றன. இன்னொரு பக்கத்தில் உரித்த தேங்காய்கள் உயர் மலைகள் போல அடுக்கப்பட்டிருந்தன. அதற்குப் பக்கத்தில் வெண்ணிறப் பாம்புகள் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்துள்ளனவோ என்று நினைத்து அங்கு சென்று பார்த்தபோது அவை புடலங்காய் கட்டுக்களாக காணப்பட்டன.

வண்ண கத்தரிக்காயின் குவியல், பச்சை மிளகாய்களின் கூட்டம் நீண்டு நெளிந்த பயற்றங்காய்கள், வெண்ணிறமான பாகற்காய்கள், விரல் போன்ற வெண்டிக்காய்கள் அப்பப்பா! நாட்டில் எத்தனை எத்தனை காய்கறிகள் உண்போமோ அத்தனையும் சந்தையில் காணப்பட்டன.



என்ன வேண்டும்? வெங்காயம் வேண்டுமா? கிழங்கு வேண்டுமா? செத்தல் மிளகாய் வேண்டுமா? அவை எல்லாம் இன்னொரு பக்கத்தில் இருந்தன. சிறிது தூரத்தில் மீன் சந்தை. அங்கே பலவகை மீனினங்கள் காணப்பட்டன. இத்தனையும் கடலிலே உலாவித் திரியும் மீனினங்களா! என சற்றுத் சிந்தித்து வியப்படைந்தேன்.

இவற்றைவிட சந்தையைச்சூழ புடவைக்கடை, மணிக்கடை, தேநீர்க்கடை, பலசரக்குக் கடை என பலவகைக் கடைகளும் தமது இயல்பைக்காட்டி நின்றன. பொருட்கள் வாங்குவதற்கு மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும் நுகர்வோரும் வந்தனர். அவர்கள் எங்கே மலிவு என்று ஓடியாடித்திரிந்து விசாரிக்கிறார்கள். வியாபாரிகளின் சத்தமோ காதைப்பிளந்து செவிடு ஆக்கியதால் சந்தையில் இரைச்சல் மிகுந்தது.

மதியமளவில் சந்தை முடிந்து கொண்டு சென்றது. கொடுத்தவர்களும், வாங்கியவர்களும், விற்றவர்களும் மனநிறைவுடன் வெளியேறினார்கள். திருவிழா நடந்து முடிந்த கோவில் வீதி போல சந்தை பொலிவிழந்து காட்சியளித்தது. நானும் இக் காட்சியை அனுபவித்துவிட்டு வீட்டுக்குத் தேவையான சில பொருட்களை வாங்கிக்கொண்டு தந்தையுடன் வீடு திரும்பினேன்.

**ச. தீபிகா**
8c

# நாட்டார் பாடல்களின் தனிச்சிறப்பு

**நா**ட்டார் பாடல்கள் என்பது கிராமிய மக்கள் தமது பேச்சு வழக்கிலுள்ள சொற் பிரயோகங்களைப் பயன்படுத்தி அமைந்த பாடல்கள் ஆகும். மனித வாழ்க்கையோடு இசை பின்னிப்பிணைந்துள்ளது. நாட்டார் பாடல்கள் பல வகைப்படும். அவையாவன தாலாட்டுப்பாடல், நலுங்குப் பாடல், கப்பற் பாடல், தொழிற்பாடல், மீன்பிடிப் பாடல், விளையாட்டுப் பாடல், வேடிக்கைப்பாடல், ஒப்பாரிப் பாடல் போன்றவையாகும்.

குழந்தையைத் தூங்க வைக்கும் பாடல் தாலாட்டுப் பாடலாகும். திருமணத்தின் போது பாடப்படும் பாடல் நலுங்குப் பாடலாகும். வேலை அலுப்புத் தெரியாமல் களைப்புத்தீர பாடப்படும் பாடல் தொழிற்பாடலாகும். ஒரு வீட்டில் இறப்பு நிகழ்ந்தால் பாடப்படும் பாடல் ஒப்பாரிப் பாடலாகும்.

நாட்டார் பாடல்களில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளில் ஒன்று உடுக்கு ஆகும். கண்ணன் கையில் புல்லாங்குழலும் சிவனின் கையில் டமருகம் (உடுக்கு) சரஸ் வதிதேவி கையில் வீணையும் அமைந்திருக்கும்.

புல்லாங்குழல் ஒரு துளைக்கருவியாகும். நாம் பல நாட்டார் பாடல்களைக் கற்றுள் ளோம். அவையாவன "மண்ணை நம்பி உழுது வைச்சு" வானம் கறுக்க வேணும்" போன்றனவாகும்.

நாட்டார் பாடல்கள் எளிமையானதாகவும் கவர்ச்சிகரமானதாகவும் அமைந்தி ருக்கும். நாட்டார் பாடல்களின் மொழிநடையும் எளிமையானதாகவும் கவர்ச்சிகர மானதாகவும் அமைந்திருக்கும். நாட்டார் பாடல்களின் சொற்பிரயோகங்கள் பேச்சு வழக்கில் அமைந்திருக்கும்.

நாட்டார் பாடல்களில் கருத்துச்செறிவு, இசையுடன் பாடக்கூடிய தன்மை, மொழி நடை, ஆக்கத்திறன், அமைப்புமுறை போன்ற விடயங்கள் அடங்கியிருக்கும்.

நாட்டார் பாடல்களில் பல வகையான பாடல்கள் உண்டு. அவையாவன மன்னார் பிரதேசத்தில் பாடப்படும் பாடல்களான வசந்தன் பாடலும் கிழக்குப் பிரதேசத்தில் பாடப்படும் ஒரு பாடலும் இவற்றுள் அடங்குபவையாகும்.

நாட்டார் பாடலுக்கு தாளநடை அமைந்திருக்கும் நாட்டார் பாடல்களின் மறு பெயர்களாவன கிராமியப் பாடல், நாட்டுப்பாடல் நாடோடிப் பாடல், பாமர ஜன கானம், வாய்மொழி இலக்கியம், பொது ஜனகானம், எழுதாக்கவிகள் என்பவை ஆகும்.

நாட்டார் பாடல்கள் இசையோடு பொருந்தத்தக்கதாக உள்ளது. இன்னும் சில பாடல்கள் உள்ளன. அவையாவன மட்டக்களப்பு, வவுனியா போன்ற பிரதேசங்களில் பாடப்படும் பாடல்கள் ஆகும். இப்பாடல்களைக் கேட்பதால் பல பயன்கள் உண்டு. அவையாவன இரசிப்புத்தனமை, கற்பனைத்திறன், மகிழ்ச்சியாகும். நாட்டார் பாடல் களின் தனிச்சிறப்பை அறிந்து வாழ்வில் மேன்மையடைவோமாக.

**செ. வானதி**
8A

# இயற்கை தரும் இன்பம்



**பொ**ங்கும் எழில் கொஞ்சும்
பொன் நிலவின் தோற்றம்
தங்கும் தரை மீதில்
தளிர்த்துவரும் செடிகள்
எங்கும் மணம் பரப்பும்
ஏகாந்த மலர்கள்
இங்கு வந்து மலர
என்ன தவம் செய்தோம்.

பச்சைப் புல்வெளியில்
பாதங்கள் படவே,
இச்சையுடன் தென்றல்
இளநகையைச் சொரிய
கொச்சை மொழி பேசி
மயிலினங்கள் ஆட
குச்சு வெளிகளெல்லாம்
மேகம் மழை சொரியும்.

மல்லிகையுடன் முல்லை
மணம் வீசி நிற்க
செல்வ மகள் தாமரையை
செங்கதிரோன் அழைக்க
மெல்லிறகை விரித்தன்னம்
மெதுவாக நீந்தி
இல்லை ஒரு தொல்லையென்று அமர
இயற்கைத் தாய் அணைப்பாள்.

**சு. யதுஷா**
10[F]

# தமிழ்மொழியின் தொன்மையும் சிறப்பும்

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்” என்ற சுப்பிரமணிய பாரதியாரின் கூற்றின்படி ஆதிகாலம்தொட்டு இன்றுவரை எமது வாழ்விலே பல மொழிகளை கையாண்ட வண்ணம் உள்ளோம். ஆனால் அவற்றின் சுவை அனைத்தும் தமிழ்மொழி போன்ற சிறப்பினை உடையதல்ல எனலாம். எனவே காலத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும் தொன்றுதொட்டு இன்றுவரை தமிழ்மொழியானது வேற்றுமொழிகளிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. இத்தகைய சிறப்பினை உடைய தமிழ்மொழியை நாம் பேணிப்பாதுகாத்தல் அவசியமானதல்லோ.

அந்தவகையிலே எமது தாய்மொழியாகிய தமிழ்மொழியின் தொன்மையை நோக்குவோம். சங்க காலத்திலே வாழ்ந்த புலவர்கள் தமிழ்மொழியின் சிறப்பினை நன்கு உணர்ந்திருந்தனர். ஏனெனில் அவர்களால் இயற்றப்பட்ட நூல்களிலும் பாடல்களிலும் தமிழ்மொழியின் சிறப்பினை வெளிப்படுத்தியுள்ளனர். இதுமட்டுமல்லாது தமிழ்மொழி மேல் மிகுந்த பற்றாளர்களாக விளங்கியுள்ளார்கள். உதாரணமாக ‘பாரதிதாசனின் கவிதைகள்’ என்ற கவிதைத் தொகுப்பிலே உள்ள கவிதையொன்றினை குறிப்பிடலாம். இக் கவிதையிலே பாரதிதாசன் தமிழ்மொழிமேல் கொண்ட பற்று விளங்கப்படுகிறது. “தமிழை என்னுயிர் என்பேன்” ‘நானும் தமிழும் மெய்யாய் உடலுயிர் கண்டீர்’ ‘தமிழின் விந்தையை எழுதத் தரமோ?’ இவ்வாறாக பல புலவர்கள் தமிழ்மொழியின் சிறப்பினை பலவாறு பாடியுள்ளனர்.

ஆனாலும் முன்னைய காலத்தைப்போல இன்று தமிழ்மொழியின் சிறப்பினை யாரும் அறிவதில்லை. வேற்றுமொழிகளின் வருகை மனித இனத்தை ஆட்கொண்டுவிட்டது. கலப்பினமொழிகளைபேசிதமிழ்மொழியை புறங்கணித்து வருகின்றனர். தமிழ்மொழியை விட ஆங்கிலமொழி உயர்ந்ததாகவும் கருதுகின்றனர். அத்தோடு தமிழ்பேசுவது ஒரு தரம் குறைந்த செயற்பாடாகவும் நினைக்கின்றனர். இதனால் இன்று தமிழ்மொழிப் பாவனை குறைவடைந்துவிட்டது. முன்னைய காலத்தில் வாழ்ந்த கவிஞர்கள் தமிழ்மொழியை பயன்படுத்தி மிகச்சிறந்த படைப்புக்களை எமக்களித்திருந்தனர். ஆனால் இன்று ஆங்கிலம், சிங்களம் முதலிய வேற்றுமொழிகளை கற்ற கவிஞர்கள் எங்கள் தமிழ் இலக்கண மரபுகளை நீக்கி புதுமொழி இலக்கியங்களை படைக்கின்றனர். ஆரம்ப காலத்தில் தமிழை தாயாகவே உருவகித்து கவி வடித்துள்ளனர். ஆனால் இன்று அவ்வாறான நிலை இல்லை எனலாம்.

இதை தவிர தமிழ்மொழி சினிமாதுறையிலும் தாக்கத்தை செலுத்தியுள்ளது. அதாவது ஆரம்ப காலத்தில் சினிமாத்துறையிலே வெளிவந்த பாடல்களிலும் கதைவடிவமைப்பிலும் தமிழ் மற்றும் தமிழுடன் சார்பான இலக்கணவியல் பிரயோகம் காணப்பட்டது. இதனால் இவை மிகச் சிறந்த படைப்புக்களாக வெளிவந்தன. ஆனால் இன்று வெளியாகும் சினிமாத்துறை சார்ந்த படைப்புக்கள் தமிழ்துறை இலக்கணவியல் அதன் பிரயோகம் சார்ந்ததாகக் காணப்படுவது அரிதாகிவிட்டது. இவ்வாறு சினிமாத்துறையிலும்கூட தமிழ்மொழியின் பிரயோகம் குறைவடைந்து செல்கின்றது. இவ்வாறு நாம் பயன்படுத்தும் துறைகளிலே தமிழ்மொழியின் பிரயோகம் குறைவடைந்து வேற்றுமொழிகளை பயன்படுத்துவது கவலைக்குரிய விடயமாகும். எனவே எமது தாய்மொழியின் சிறப்பினை உணர்ந்து அதை பிறர்க்கும் எடுத்து விளக்கவேண்டிய கடப்பாட்டிலே உள்ளோம்.

தமிழ் மக்களாகிய நாம் நம் தாய்மொழியாகிய தமிழ்மொழியின் சிறப்பை விளங்கிக் கொள்வதனூடாக நம் தாய்மொழிக்கு செய்யவேண்டிய பல கடமைகளை உணரமுடியும். தமிழ்மொழியானது "சீர்பெற்று விளங்கிய தமிழ்மொழி முடிவில்லாது வளரும்மொழி" என்ற சிறப்பினை உடையது. முச்சங்கங்களாலும் மூவேந்தர்களாலும் போற்றப்பட்டதும் தமிழ்மொழியே, அமுதமோ, தேனோ என செவிக்கு இனிமையும், சிந்தையில் தேன் போன்ற இனிமை ஊற்றையும், பேசுகின்ற நாவிலே தித்திப்புத் தருவது தமிழ்மொழி மட்டுமே. இவ்வாறான எமது தமிழ்மொழி விலைமதிப்பற்ற சொத்தாகும். எனவே எம்மை வாழவைக்கும் உயர்ந்த மொழியை போற்றவேண்டும். தமிழ்மொழியை வெறுத்தொதுக்காது பேணவேண்டும். வேற்றுமொழிகளைவிட எமது தாய்த்தமிழ் மொழிக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். இவ்வாறு தமிழ்த்தாய்படும் அல்லலைக்கண்ட சோமசுந்தரப் புலவர் வருத்தமடைந்து தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துவதாக பின் வரும் பாடலடி அமைகின்றது.

"மாதா படும் அல்லலைத் தீர்க்க அறிவு வராதா" என்ற வரியும்

........

"அன்னை மொழிதனை நாமே வெறுத்தருவருத்து அவமதித்திடல் அழகாமோ" என்ற வரியும் இதற்கு சான்று பயப்பதாக உள்ளது. தமிழன் என்ற பெயர் கொண்டு இப்பூமியில் வாழ்வதில் எவ்வித பிரயோசனமும் இல்லை. 'தமிழன்' என்ற சொல்லுக்கு அர்த்தமுடையதாக வாழ்ந்து காட்டவேண்டும். இலக்கியங்கள் வாழ்வை வளப்படுத்த வல்லன. ஆகையால் இலக்கியங்களில் கூறப்படும் தமிழ்மொழியின் தொன்மையும் சிறப்பினையும் கற்று பிறருக்கும் உரைத்தல்வேண்டும்.

தமிழ்மொழியினை பேணிப்பாதுகாத்தல் மட்டுமன்றி தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு எம்மாலான உதவிகளைப்புரியவும்வேண்டும். அதாவது நாளுக்குநாள் வேற்றுமொழியிலே

பல்வேறு நூல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. ஆனால் அவற்றில் ஒரு சிலவே தமிழ்மொழியில்மொழிபெயர்ப்புச்செய்யப்படுகின்றன. அநேகமானஅரிய நூல்கள்பயன் படுத்தப்படாது போகின்றன. எனவே வேற்று மொழியிலுள்ள அரிய நூல்களை தமிழ் மொழியில்மொழிபெர்க்கஎம்மாலானஉதவிகளைவழங்கவேண்டும். இது மட்டுமல்லாது தமிழ்மொழியிலே இறவாத புகழுடைய நன்நூல்களை இயற்றுதல் வேண்டும். தெருவெங்கும்நாடெங்கும்தமிழ்முழக்கம்செய்து உலகளாவிய ரீதியிலேதமிழ்மொழியை பரப்பவேண்டும். நாம் கண்ட புலவர்களிலே கம்பர், வள்ளுவர், இளங்கோ போன்ற புலமைமிக்கவர்களை போற்றி அவர்கள் இயற்றிய திறமைமிகுந்த புலமை கொண்ட நூல்களை கற்றொழுகுதல் வேண்டும்.

எம்மை அன்போடு பெற்றுவளர்த்த தாய்க்கு எவ்வளவு அன்பும் நன்றியும் உடையோமாக இருக்கின்றோமோ அதேபோல்எம்மை வளர்த்து விடுகின்றதமிழ்தாயின் பெருமைகளையும் சிறப்புக்களையும் அறிந்து பேணவேண்டும். தமிழ்த்தாயிடம் உள்ள பல நல்ல விடயங்களை அறிவதற்கு தமிழ்மொழியை நன்கு கற்கவேண்டும். இத் தமிழ்மொழியை கற்பதன் வாயிலாக வெள்ளம் பெருக்கெடுத்து நிற்பதைப்போல கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் பெருகும். எனவே இன்றிலிருந்து தமிழ்மொழியின் சிறப்பினை உணர்ந்த நாம் அனைவரும் தாய்மொழியை கற்று வையகத்தில் வாழ்வாங்கு வாழவேண்டும். இதையே பாரதியார் "தெள்ளுற்ற தமிழமுதின் சுவை காண்பார்.

இங்கமரர் சிறப்புக் கண்டார்" எனக் கவிபாடியுள்ளார்.

**யோ. சுலோஜனா**
11A

# வாசுவின் தியாகம்

பிறருக்கு உதவி செய்வது வாசுவினுடைய பிறவிக்குணம். பிறந்ததிலிருந்தே வாசு அப்படித்தான். ஒரு வருட வித்தியாசத்தில் அக்கா உமாவுக்கு தம்பியாய் வந்து பிறந்தவன். அக்காவுக்குத் தெரியாமல் ரகசியமாய் அம்மா அவனுக்கு ஏதாவது சிற்றுண்டி கொடுத்தால் விவரம் அறியாமல், வெகுளியாக அக்கா எதிரிலேயே போய் உண்பான். அப்போது அக்கா கேட்டால்போதும் உடனே அவளுக்குத் தன்னுடைய சிற்றுண்டியில் பாதியைக் கொடுத்து விடுவான்.

சின்னவயதிலேயே எவ்வளவு தாராளம்! வாசுவைப் பெற்ற தண்டபாணி - கல்யாணி தம்பதியினருக்கு கண்களில் நீர் கொட்டும். இன்னும் கொஞ்சம் வளர்ந்து காற்சட்டை போட்டுக்கொண்டு ஆரம்பப் பாடசாலைக்கு சென்றபோது வயதான பாட்டி கேட்காமலே பூச்செடிகளிலிருந்து பூப்பறித்து தருவான்.

கேட்காமல் தானாகவே உதவி செய்யும் நல்ல குணம் இவனுக்கு எப்படி வந்தது? எங்கு போனாலும் அவனுக்கு நல்ல பெயர்தான். வாசு எவ்வளவு நல்ல பிள்ளை. வரும் உறவினர்கள் மனமாரப் புகழ்வார்கள். காலம் செக்கன் முள்ளைவிட வேகமாக ஓடியது. ஒருமுறை ஏழாந்தரம் பொது அறிவுப் பரீட்சையில் கூடிய புள்ளி வாங்கினான் வாசு.

அவனுக்கு அழகான பேனாக்களை பரிசளித்தனர். வீட்டிற்கு வந்ததும் அக்கா உமா அது தனக்கு வேண்டும் எனக் கேட்டாள். உடனே ‘இந்த பேனாக்களை நீ வைத்திரு’ எனக் கொடுத்துவிட்டான். பிறகு வாசுவிற்கு கிடைக்கும் ஒவ்வொரு பரிசும் உமாவிடம் தான் போய்ச்சேரும். பள்ளியில் ஒவ்வொரு ஆசிரியருக்கும் அவனைத் தெரியும்.

ஆசிரியர் தினமா, சுதந்திர தினமா, விளையாட்டுப் போட்டியா எல்லாவற்றிற்கும் அவனுடைய உதவி தலைமை ஆசிரியருக்கு தேவைப்படும். பல மாணவர்களை அழைத்துக்கொண்டு நற்காரியங்களுக்கு உண்டியலுடன் ஒவ்வொரு வீடாக ஏறி இறங்க தயங்கமாட்டான் வாசு. அது மட்டுமா? தன்னுடைய கையில் கிடைக்கும் ஒவ்வொரு காசையும் வெட்டிச்செலவு செய்யாமல் சத்துணவுத் திட்டத்திற்கு தன்னுடைய காணிக்கையாக கொடுத்துவிடுவான்.

அப்படிப்பட்ட நல்லவனுக்கும் ஒருநாள் சோதனை வந்தது. வாசு வீதியின் ஓரமாக நடந்து கொண்டிருந்தான். அப்போது தன்னுடன் படிக்கும் கண்தெரியாத மாணவி பத்மா குறுக்காக சாலையைக் கடந்து கொண்டிருப்பதைக் கண்டான். உடனே அவளுக்கு உதவி செய்வதற்காக அவசர அவசரமாக சாலையில் இறங்கினான்.

அப்போது வேகமாக வந்த கார் அவன் மீது மோதியது. அடுத்த நிமிடத்தில் இரத்த வெள்ளத்தில் மிதந்தான் வாசு. மயிரிழையில் உயிர் தப்பிய பத்மா விபரம் அறிந்து திகைத்து நின்றாள். மறுநிமிடம் அங்கு கூட்டம் கூடியது. மோதிய அதே காரில் வாசு ஏற்றப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

தகவல் அறிந்து தண்டபாணி - கல்யாணி தம்பதியினர் பறந்து வந்தனர். வாசுவுக்கு உயிர் பிரியும் நிலையில் அப்போது மூடியிருந்த கண்கள் திறந்தன. அப்பாவை அருகில் அழைத்தான். அவர் வாசுவின் வாயருகே குனிந்தார். “ அப்பா நான் இறக்கப் போகிறேன். ஆனால் இறக்கும் முன் என்னுடைய கண்களை, கண் தெரியாத பத்மாவுக்குத் தந்து விட விரும்புகின்றேன். அதனால் நான் இறந்தவுடன், என்னுடைய கண்களை உடனடியாகவே அகற்றி அவளுக்குப் பொருத்தி விடுங்கள்” என்றான் வாசு. மறுநிமிடம் வாசுவின் தலை சரிந்தது. நல்லவர்களை சீக்கிரமே தன்னிடம் அழைத்துக் கொள்வதில் ஆண்டவனுக்குத் தான் எவ்வளவு விருப்பம்! இதுவே வாசுவின் தியாகமாகும்.

**சி. ரேணுகா**
9F

# சர்வதேச அரங்கில் பெண்கள்

வளர்ந்துவரும் நவீன உலகானது இருபத்தியொரு நூற்றாண்டுகளின் முற்பகுதியிலே மிகப்பெரும் கண்டுபிடிப்புக்களையும் சாதனைகளையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. இக்காலகட்டத்தில் பெண்களின் நிலையானது மிகவும் முக்கியமான இடத்தை பெற்றுக்கொண்டிருக்கிறது.

பண்டைய காலத்தில் பெண்கள் அடிமைகளாகவும் கோழைகளாகவும் கருதப்பட்டு சமூகத்தில் ஆளுமையற்றவர்களாக கருதப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர். ஆனால் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இற்றைவரை பெண்கள் மெல்ல மெல்ல சமூக அரங்கிலிருந்து சர்வதேச அரங்குவரை பல சாதனைகளை படைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். இதற்கு மகாகவி சுப்பிரமணியப் பாரதியார் போன்ற புரட்சிக் கவிஞர்களின் கவிப்பாடல்களின் உந்துதல்களும் காரணமாய் அமைந்திருக்கலாம்.

அந்தவகையில் பெண்கள், கலை, கலாசார, சமூக, அரசியல், அறிவியல் போன்ற பலதுறைகளிலும் தலைமைத்துவத்தைப் பெற்று அடிமைப் பெண் என்ற அந்தஸ்தை உயர்த்திய வண்ணமேயுள்ளனர். அதாவது இக்காலகட்டத்தில் பெண்களில் சிலர் கலை ரீதியாக பல சாதனைகளை நடாத்தி பிரபல்யம் பெற்றுள்ளனர். அந்த வகையில் நாட்டிய மங்கை ருக்மினிதேவி, அருண்டேல் போன்ற பலரைக் குறிப்பிடலாம்.

அதைவிடப் சமூக ரீதியாக தனித்து நின்று உதவி நிறுவனங்களை நடாத்தி ஏழைச் சிறுவர்களின் உன்னத உயர்விற்கு அடியிட்ட மங்கைகளும் உள்ளனர். அந்த வகையில் அன்னை திரேசா, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற போற்றத்தகு பெண்மணிகளை குறிப்பிடலாம்.

தொடர்ந்தும் அரசியல் வாழ்விலும் பெண்கள் ஆண்களுக்கு நிகராக அவர்களுக்கும் தலைவர்களாக தலைமைப் பொறுப்பேற்று பல சாதனைகளை நடாத்திய சாதனைப் பெண்மணிகளும் உள்ளனர். தற்போதும் தலைமைப் பதவியேற்று பல சாதனைகளை நடாத்திய சாதனைப் பெண்மணிகளும் பணிபுரிந்து வருகின்றனர் என்பது எவரும் அறிந்த உண்மையே, அந்தவகையில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி, இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி பிரதீபா பட்டேல், இலங்கையின் முன்னாள் பிரதமர் ஸ்ரீமா வோ பண்டாரநாயக்கா, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா குமாரதுங்க, தற்போதைய ஐக்கிய நாடுகளின் செயலாளர் நவநீதம்பிள்ளை, அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் கிளாரி கிளின்டன் போன்ற பலரைக் குறிப்பிடலாம்.



அதேபோன்று அறிவியல் துறையான மருத்துவம் விஞ்ஞானம் போன்ற துறைகளிலும் சாதனை படைத்துக் கொண்டிருக்கின்றனர். விண்வெளியில் சாதனை படைத்தவர்களில் கல்பனா சௌலா, வலன்ரீனா தெரஸ்கோவா போன்ற வீரப்பெண்மணிகளை கூறலாம். அதுமட்டுமல்ல பெண்கள் விளையாட்டுத் துறையிலும் சாதனை புரிந்த வண்ணம் உள்ளனர்.

அந்தவகையில் முன்னொரு காலத்தில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியினை பெண்கள் பார்க்கக்கூடாது என்ற நிலை இருந்தது. ஆனால் இன்று பெண்கள் ஒலிம்பிக் விளையாட்டில் தங்கப்பதக்கங்களை வென்று வருகின்றனர்.

பெண்ணானவள் அடிமைத்தனத்தில் இருந்து அண்டவெளியில் ஆய்வுசெய்து எல்லையற்ற சாதனை புரியும் அளவிற்கு இன்றையபெண்கள் சர்வதேச அரங்கில் சவால்களை முறியடித்து தலைமைத்துவம் வகிக்கும் தலைவர்களாக திகழ்கின்றனர் என்றால் அது பெண்ணினத்தின் பெருந்தன்மை ஆகும்.

**பா. விஸ்ணுகா**

*9c*

# பெண்மை...

உலகில் மென்மையின் பிறப்பிடம் பெண்மை
பெண்மையின் தன்மை தண்மை
பெண்ணாகப் பட்டவள் சிலநேரம்
வண்மை காட்டினாலும் அதற்குள் ஒளிந்திருப்பது அன்பு.

பெண்மையின் முதல் உருவம் தாய்மை
இவளே பெண்மையின் அடிப்படை இலக்கியம்
இவள் இல்லாது நாங்கள் ஏது?
முழுவதில் தாய்மை எனும் பெண்மையை போற்றுவது எமது கடமை.

அன்னை என்பவள் அன்புக்கு ஓர் அகராதி
அவள் இளமையில் கண்டிராத பலவற்றை - தன்
பிள்ளைகளுக்குப் பார்த்துப் பார்த்து செய்வாள்
இதுவே, அன்னையின் இரக்க குணம்.

உலகில் பெண்ணிற்கு மட்டுமே தாங்கும் சக்தியை
கொடுத்துள்ளார் இறைவன், பெண் எத்தனை வலி,
வேதனைகள் பட்டாலும் அவளே இறுதியில்
சாதிப்பாள். இதுவே பெண்மையின் மறுமுகம்.

பூமியில் பூமாதேவி எனும் பெண் இல்லையேல்
அடுத்த கணம் நாம் மண்ணிற்குள் - என்பதை
நினைவில் வைத்து, பெண்மைக்கு ஊறு
விளைவிக்காமல் பெண்மையைப் போற்றுவோம்

**ப. லாஞ்சனா**
**09A**

# தனிநாயகம் அடிகளாரின் அளப்பரிய தமிழ்ப்பணி

தனிநாயகம் அடிகளார் இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊர்காவற்றுறையில் கரம்பொன் என்ற கிராமத்தில் நாகநாதன்ஹென்ரி ஸ்ரனிசுலாசு, சிசிலியா இராசம்மா பஸ்தியாம்பிள்ளை ஆகியோருக்கு மகனாக 1913ஆம் ஆண்டு ஆவணி 02ஆம் திகதி பிறந்தார். தனிநாயகம் அடிகளாரின் இயற்பெயர் சேவியர் நிக்கலஸ் ஸ்ரனிசுலாசு என்பதாகும். பிற்காலத்திலே இவர் தமிழில் கொண்ட தீராத காதலினால் உரோமன் கத்தோலிக்க குருவாக நியமிக்கப்பட்டபோது தனது பெயரோடு சேவியர் எஸ் தனிநாயகம் என்ற தமிழ்ப் பெயரினையும் சேர்த்துக்கொண்டார்.

தொடக்கக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை ஆங்கில மொழியில் 1920 முதல்1922 வரை யாழ்ப்பாணப் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பயின்றார். பின்னர் 1931 முதல் 1934 வரை கொழும்பில் புனித பேர்னாட் மறைப்பள்ளியில் சேர்ந்து இறையியல் கல்வி பயின்றார். இக்காலத்தில் ஆங்கிலம், இலத்தீன், இத்தாலியம், பிரெஞ்சு, எசுப்பானியம், போர்த்துக்கீயம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். தொடர்ந்து உருசியம், கிரேக்கம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்து ஒரு பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார்.

தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப்பணி அளப்பரியது. 1964ஆம் ஆண்டு தைத்திங்கள் ஆறாம் நாள் முதல் பத்தாம் நாள் வரை டில்லியில் நடைபெற்ற உலகக் கீழ்த்திசை அறிஞர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட தமிழறிஞர்களிடம், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் அமைத்துப் பணிபுரிய வேண்டியதன் இன்றியமையாமையைப் பற்றி அடிகளார் வலியுறுத்திப் பேசியபின் அம்மன்றம் அமைக்கப்பட்டது. அம் மன்றம் கோலாலம்பூரில் நடந்த முதல் உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடாகும். இதுவே எல்லா உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளையும் நடத்தி வருகிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்றபோது தமிழின் சிறப்பை ஆய்ந்தறிந்த அடிகளார் அதை உலக அரங்கில் எடுத்தோம்புவது தமது தலையாய கடமை என்று உணர்ந்தார். ஆகவே 1949-1951ஆம் ஆண்டுகளில் உலகப் பயணத்தை மேற்கொண்டு தமிழ்தூது நிகழ்த்தினார். அதன் பொருட்டு பல அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று தமிழின் சிறப்பைப் பற்றி உரை நிகழ்த்திய அடிகளார், ஐக்கியஅமெரிக்க நாட்டில் மட்டும் ஒரே ஆண்டில் இருநூறு விரிவுரைகளாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது அற்புதமான ஆய்வுரைகள் ஏற்கனவே இந்திய ஆய்வில் ஈடுபட்டிருந்த பல மேனாட்டு அறிஞர்களின் கண்களைத் திறந்தன. அவர்கள் பலரைத் தமிழாய்வில் ஈடுபட ஊக்குவித்த அடிகளார், பல்வேறு மேனாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறை அமைந்திடவும் வழிவகுத்தார்.

இவ்வாறு, இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டுமே தமிழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலைமையை மாற்றி பல நாடுகளிலும் தமிழாய்வு நடைபெற வழிவகுத்த பெருமை அடிகளாருக்கே உரியது. இந்திய நாகரிகத்தின் முழுமையையும், இலக்கியச் செழுமையையும் உரிய முறையில் ஆராய்ந்து அரிய வடமொழி அறிவோடு தமிழறிவும் இன்றியமையாதது என்பதை அறிஞர் உலகத்துக்கு அடிகளார் உணர்த்தினார். தமிழாய்வுக் கட்டுரைகளை தமிழில் மட்டுமே படைத்தால் போதாது, அவை ஆங்கிலத்தில் வடிக்கப்பட்டால்தான் உலக அரங்கினைச் சென்றடைய முடியும் என்பதை தம் உலகத் தமிழ்தூதுப் பயணத்தின்போது அடிகளார் உணர்ந்தார்.

இத்தேவையை நிறைவுசெய்ய 1952ஆம் ஆண்டில் "தமிழ்க் கலாசாரம்" (Tamil Culture) என்னும் ஆங்கில முத்திங்கள் இதழை அடிகளார் வெளியிடத் தொடங்கினார். இதுவே பின்னர் உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் தோன்ற வழிவகுத்தது. தமிழ் சார்ந்த எல்லாத் துறைகளுமே தமிழ் ஆய்வுக்கு உட்பட்டவைதான் என்பதை தம் இதழ் மூலம் அடிகளார் வலியுறுத்தி வந்தார். பிறநாட்டு இலக்கியங்களோடு தமிழ் இலக்கியங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்வது தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் என்று அவர் உறுதியாக நம்பினார். தமிழில் முதல் முதலாக வெளியிடப்பட்ட கார்தில்யா, தம்பிரான் வணக்கம், கிரிசித்தியானி வணக்கம், அடியார் வரலாறு போன்ற பல நூல்களை அவர் ஐரோப்பிய நூலகங்களில் ஆய்வு செய்து கண்டுபிடித்துத் தமிழ் உலகுக்கு வெளிப்படுத்தினார்.

அவ்வாறே, 1679 ஆம் ஆண்டு அச்சிடப்பெற்ற தமிழ் - போர்த்துக்கேய அகராதியையும் கண்டுபிடித்து அதனை மறுபதிவு செய்து 1966ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின்போது வெளியிட்டார். நேப்பிள்ஸ் நகரிலும், பாரிஸ் நகரிலும் அவர் பல மாதங்கள் தங்கி, சிறப்பு நிலைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

பேராசிரியப்பணி, ஆய்வுப்பணி, உலகஅரங்கில் தமிழ்த் தூதுப் பணி, கள ஆய்வுப் பணி, ஆய்விதழ்ப் பணி, ஆசிரியப்பணி, உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவி உலகத் தமிழ் அறிஞர்களை ஒருங்கிணைத்து உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு நடைபெற வழிகோலிய பணி, மறைந்த தமிழ் நூல்களைக் கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்த பணி, கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு பரவியிருந்தமையை கண்டு உணர்த்திய பணி போன்ற பல பணிகள் மூலம் தனிநாயக அடிகளார் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். தனிநாயகம் அடிகளார் புரட்டாதி மாதம் 1ஆம் திகதி 1980ஆம் ஆண்டு இறைபதமடைந்தார்.

**ச. சண்முகராஜா,**

**கலைப்பிரிவு 12^B (2015)**

# கிளர்ந்தெழ வேண்டியவர்கள் பெண்களே!

இந்த உலகம் தாய்மையை கொண்டாடுகிற அளவுக்கு பெண்மையை கொண்டாடுவது இல்லை என்பது வருத்தமானதொரு விஷயமே! தாய்மை அடைகிறபோதுதான் அவளைக் கொண்டாட ஆரம்பிக்க வேண்டுமா? ஏன்....? அப்படி கொண்டாடாமல் விட்டால் இந்த உலகம் பழிக்குமே அதனால் தானோ என்னவோ ஒருவன் தாய்மையை மட்டுமாவது மதிக்கிறான்.

ஆணாதிக்கம் என்பது ஒரு பிறவிக் குணமா? இயற்கை ஆணுக்கு அளித்த ஆயுதமா? இல்லை இயற்கையை வென்ற ஆணின் குணாதிசயமா? இப்படி எங்களுள் விடை கிடைக்காத கேள்விகள் ஏராளம். யோசித்துக் கொண்டிருக்கையிலேயே நம் இதிகாசங்கள் நினைவுக்கு வந்தன. ஆண்களின் பழிசுமத்துகிற மனோபாவத்துக்கு விடைதேடி பயணிக்கவேண்டும் என்றால் பல நூற்றாண்டுகள் பின்னோக்கிச் செல்ல வேண்டும். அசுரனிடம் சிக்கிய மனைவியைப் பார்த்ததும் மகிழ்ச்சி கொள்ளாமல் சந்தேகப்பட்ட ராமனும், ஆண்கள் சூதாடியபோது மண்ணை வைத்து விளையாடியதோடு மட்டுமல்லாமல் மனைவியையும் வைத்து விளையாடிய பாண்டவர்களும்தானே நம் முன்னோர்கள்?

தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கெதிராக கிளர்ந்தெழ வேண்டியவர்கள் பெண்களே. பெண்கள் இப்போது மிகவும் முன்னேறி விட்டார்கள் என்பது இன்று பலராலும் முன்வைக்கக்கூடிய கூற்று இதுவாகும். இக்கூற்று ஏற்றுக் கொள்ளப்படவேண்டியதுதான். ஆனாலும் இந்த முன்னேற்றம் எந்தளவுக்கு இருக்கின்றது என்பதும் சிந்திக்கப்பட வேண்டியதாகிறது. முன்னேற்றம் என்பது துணிச்சல், தன்னம்பிக்கை என்கின்ற இரண்டு விடயங்களில் தங்கியிருக்கின்றது. இந்த இரண்டு விடயங்களுமில்லாத பெண்கள் மட்டுமல்ல மனிதர்கள் யாருமே முன்னேற முடியாது.

எமது சமூகத்தில் பெண்கள் மிகவும் வேகமாக முன்னேற வேண்டிய தேவை இருக்கின்றது. ஏனென்றால் பாதிப்புகளும் பிரச்சினைகளும் மூடக் கொள்கைகளும் முரண்பாடுகளும் பெண்களிடமே அதிகம் காணப்படுகின்றன. இவை நிச்சயமாக முன்னேற்றத்திற்கு தடையாகவே அமையும். இந்தத் தடைகளை உடைத்து அல்லது தகர்த்து முன்னேற வேண்டிய பெரும் பொறுப்பு பெண்களுக்குரியது. அப்பொழுதுதான் பெண்கள் இலகுவில் முன்னேற முடியும். பெண்ணின் ஆற்றல், ஆளுமை என்பன பெரியளவில் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படாதவையாகவே இருப்பதையும் பல இடங்களில் பெண்ணின் ஆளுமை வெளிப்படுவதை அவள் சார்ந்தோர் விரும்பாத நிலையும் இருப்பதைக் காண்கிறோம். அது மட்டுமல்லாமல் பெண் என்பவள்

இரண்டாம்படி நிலையில் இருப்பதுதான் அவளின் பெண்மைக்கு புனிதம் கற்பிப்பது என்ற கருத்தும் இருந்து வருகின்றது.

பலஇடங்களில்பெண்தானேஎன்கின்றஅலட்சியம்அல்லது அக்கறையின்மையையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இப்படியான பார்வைகளையும், படிநிலைகளையும் தாண்டி முன்னேற வேண்டிய நிலையிலேயே இன்றைய சாதாரணபெண் இருக்கின்றாள். எத்தனைபேர் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகக் கிளர்ந்து எழுகிறார்கள் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. ஏதோ ஒரு விதத்தில் ஏற்படும் பயமும் தயக்கமும் அநீதிக்குட்பட்டவர்களின் உணர்வுகளை மறைத்து விடுகின்றன. அல்லது மௌனிக்க வைத்துவிடுகின்றன என்றே சொல்லவேண்டும். உண்மையில் எப்பொழுதும் அநீதி இழைப்பவர்கள்தான் அச்சமுறவேண்டும். ஆனால் இங்கே மாறாக அநீதிக்குட்படுபவர்களே அச்சமுறுகின்றார்கள்.

காலங்காலமாய் பெண் இப்படித்தான் இருப்பதற்கு பழக்கப்பட்டிருக்கின்றாள். அநீதிக்கெதிராக குரல் கொடுப்பது அல்லது நடவடிக்கை எடுப்பது என்பது பெண்ணுக்கு அவமானம், களங்கம் என்று அன்றையகாலம் போதித்தது. அந்த கருத்தும், ஆழமான வழி நடத்தலும் இன்றும் சில இடங்களில் ஊறி இருப்பதை நாம் காண்கின்றோம். இவை களையப்படவேண்டிய கருத்துக்களாக இருக்கின்றன. சமூகமட்டங்களில் இன்னமும் துன்புறுத்தப்படும் ஏமாற்றப்படும், அவமதிக்கப்படும் பெண்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். இவர்கள் எல்லோருமே இந்த அநீதிகளை எதிர்த்து போராட முன் வருகின்றார்களா என்றால் இல்லை என்றே சொல்லமுடியும்.

இதன் மூலம் அநீதி இழைப்பவர்கள் தப்பிக்கொள்ள பாதிக்கப்பட்டவர்கள் மன உளைச்சலுடனும் மாற முடியாத துன்பத்துடனும் வாழ நேரிடுகிறது. மேலும், அநீதி இழைப்பவர்கள் மீண்டும் மீண்டும் இதே அநீதியை இவர்களுக்கோ, அல்லது இன்னும் பலருக்கோ இழைக்கும் மனத்துணிவும் இதன்மூலம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. தவறு செய்வது மட்டுமல்ல. தவறு செய்யப்படுவதை வெறுமனே அனுமதித்திருப்பதும் மாபெரும் தவறாகிறது.

ஆகவே பெண்கள் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக கிளர்ந்தெழ வேண்டியதும் போராட வேண்டியதும் காலத்தின் தேவையாகின்றது. இந்தக் கிளர்ச்சி அல்லது போராடும் மனப்பான்மை தான் பெண்களின் முன்னேற்றங்களுக்கு உந்துதலாக அமையும்.

**க. தர்மிளா**
**கலைப்பிரிவு 12A (2015)**

# உயர்தல் ஆவது உண்மையே

ஒழுக்கமே உலகத்தின் உயிர் நாடி - அதை
ஓம்புதல் மனிதத்தின் பண்பாகும்
ஒழுக்கமே உயிரிற்கு அழகாகும் - அதை
உறுதியாய் கொள்ளுதல் சிறப்பாகும்

மழலைகள் பேசிடும் குழந்தையும் - அதை
மாண்புற வளர்த்திடும் குரவரும்
உலகினை ஆண்டிடும் மன்னரும் - தினம்
ஒழுக்கமே கொண்டிட வேண்டும்.

கற்றிடும் மாணவ மழலையும் - தினம்
பணிவுடனாதலும் ஒழுக்கமே
மற்றவர் பெற்றவர் தம்மையே - தினம்
மதித்திடல் மட்டில்லா ஒழுக்கமே.

முதிர்ந்தவர் தம்மையும் பணிந்துமே - அவர்
உயர்ந்த பாதங்கள் வீழ்ந்துமே
கனிந்தவர் வார்த்தைகள் கேட்டுமே - வளம்
கனிந்திட உருகுதல் உயர்த்துமே.

அன்புடன் வார்த்தைகள் பேசுதல் - தினம்
அருளுடை நெஞ்சுடையராகுதல்
அழுக்கினை நெஞ்சினால் அகற்றுதல் - தினம்
அடக்கமும் பொறுமையும் கொள்ளுதல்.

சீறிடும் சினத்தினை அடக்குதல் - அதை
ஆற்றி பொறுமையாய் அகற்றுதல்
ஆசையின்வலையினை விலக்குதல் - அனைத்து
உயிரிலும் அன்பு கொள்ளுதல்

உண்மையாய்ப் பேசுதல் உயர்த்திடும் - உலக
உத்தமர் வாழ்க்கையை ஓர்ந்திடும்
ஒழுக்கமாய் பண்புகள் கொண்டிடின் - நாம்
உயர்ந்தவர் ஆவது உண்மையே.

**ஜெ. சங்கீதா**
9A

# நிகழ்காலத் தோல்விகளே எதிர்கால வெற்றிகள்

**நா**ம் வாழும் வாழ்வானது ஒரு சிறுகாலப்பகுதியாகும். அச் சிறுகாலப்பகுதியில் எமது வாழ்வின் இன்பங்களையும் துன்பங்களையும் நிர்ணயிக்கக்கூடிய ஆற்றல் வெற்றி, தோல்வி என்பவற்றிலே உள்ளடங்கியுள்ளது. இவை இரண்டுமே மனித வாழ்வினை பல்வேறு கோணங்களிலும் புரட்டிப் போடுகிறது. மனிதன் ஒருவன் செல்லும் திசைகளை நிர்ணயம் செய்கிறது.

பரந்து விரிந்து காணப்படும் விசாலமான ஞாலத்தில் நாம் பெற்றுக் கொள்ளும் வெற்றிகளுக்கு நாம் தொடர்ந்து பெற்றுவரும் தோல்விகளே காரண கர்த்தாக்கள் ஆகின்றன. அதனை நாம் உணர்ந்து கொண்டால் தோல்விகளைக் கண்டு அஞ்சத் தேவை இல்லை.

தோல்வியைச் சந்தித்து விடுவோமோ? என எண்ணி நமது மகிழ்ச்சி, புகழ், செல்வம், நம்பிக்கை, வெற்றி என்பவற்றை இழந்திடல் கூடாது. ஒரு மனிதனின் வாழ்வில் தோல்விகள் என்பது நிரந்தரமானது அல்ல. ஆனால் கோழைகளிற்கு நிரந்தரமாக தோல்வி கிடைக்கின்றது என்றால் அவர்கள் தொடர்ந்து பெற்று வரும் தோல்விகளைக் கண்டு ஓடி ஒழிவதே காரணமாகும். காந்தமானது தனது கவர்ச்சி விசையினால் இரும்புப் பொருட்களை கவர்வதைப் போன்று தோல்வியைக் கண்டு நடுங்கும் குணமே தோல்விகளைக் காந்தம் போல் கவர்ந்து இழுக்கும். இதன்மூலம் வெற்றியை பெற்றுக்கொள்வதற்கான எல்லையற்ற வாய்ப்புகளைப் பயன்படுத்த தவறியவர்கள் ஆகின்றோம்.

ஒரு செயலைச் செய்ய முற்படும் பொழுது நாம் தோல்வியடையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெற்றிப் பாதையில் அடியெடுத்து வைக்கின்றோம் என்பதை அறிதல் நன்று. தோல்வியடைவதன் மூலம் எவ்வாறு வெற்றி அடைக்கின்றனர் என்பதை எடுத்து நோக்கினால் நாம் பத்து தடவைகள் முயற்சிக்கின்றோம். அதில் ஒன்பது முறைகள் தோல்வியைச் சந்தித்து பத்தாவது தடவையில் வெற்றியைச் சந்தித்து வெற்றியாளர் ஆகின்றோம். ஒவ்வொரு தடவையும் வெற்றிபெற வேண்டும் என்பது கட்டாயமில்லை. அதற்காக ஒவ்வொரு முறையும் தோல்வியடைய வேண்டியதும் இல்லை.

"முயற்சியுடையார் என்றும் இகழ்ச்சியடையார்" என்ற பெரியோர் கருத்திற்கிணங்க முயற்சியே வெற்றியின் அடையாளம்.

வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமாயின் என்ன செய்ய வேண்டும்? வெற்றி பெற்ற நபர்களுடன் இணைந்துகொண்டு, வெற்றி எங்கு உண்டோ அங்கே செல்லுங்கள்.

எவரும் பிறக்கும்போது துன்பத்தோடு பிறப்பதில்லை. தங்களின் சந்தோசத்தை தாங்களே அமைத்துக்கொள்கின்றனர். அதுபோல் வெற்றிகள் கிடைக்கவில்லை என புலம்பிக்கொண்டு இருக்காமல் வெற்றி வாய்ப்புக்களைத் தேடிச் செல்ல வேண்டும்.

முயற்சியில் தோற்றுவிட்டேன் என அதிர்ச்சியில் அப்படியே அமர்ந்து விடாமல், சரி அடுத்து என்ன? எனக் கேட்பதும் முறையான தொடர்ச்சியான போராட்டமுமே வெற்றியைத் தரும். எந்தவித செயலையும் நம்பிக்கையை விடுத்துப் பாதியில் கைவிட்டுவிடக் கூடாது. வெற்றி பெற்றவர்களைப் பார்த்து நாமும் இவர்களைப் போல் வெற்றி பெற முடியாதா என்ன? என எண்ணி விடா முயற்சி, தளராத உள்ளமும் கொண்ட தன்னம்பிக்கையைக் கொண்டிருந்தால் இலகுவில் வெற்றியைத் தட்டிச் செல்லலாம்.

நிகழ்காலத்தில் ஏற்படும் தோல்விகளே நம் எதிர்கால வெற்றிகளாகும். இவ்வுலகில் மிகப் பெரிய சாதனைகள் சாதிக்கப்படுவது வலிமையினால் அல்ல, விடா முயற்சியினால் தான். தோல்விகளைக் காட்டிலும் சிறந்த ஆசான்கள் இருக்க முடியாது. தோல்வி அடைகையில் அதிகப்படியான அனுபவங்களைப் பெற்றுக்கொள்கின்றோம். தோல்வி என்றால் நீங்கள் எதனையும் சாதிக்கவில்லை என அர்த்தமாகாது மாறாக சில அனுபவங்களைப் பெறுகின்றோம் என்பதே அர்த்தம். தோல்வியைக் கண்டு அஞ்சுபவருக்கு வெற்றித் தானாகவே விலகிச் செல்லும். தோல்வி என்றால் இறைவன் உங்களுக்கு வேறு நல்ல எதிர்காலத்தை நிர்ணயித்துள்ளார் என்பதே பொருளாகும். தோல்வியே வெற்றியின் முதல் படியாகும்.

"நம்பிக்கையோடு தொடர்ந்து சென்று துணிந்து நில், தோல்வி கிடையாது"

**ம. டிலக்சியா**
**கலைப்பிரிவு 12A (2015)**

# தந்தை தாய் பேண்

**ந**மக்கு என்றும் இனியவர் தாய் தந்தையரே, அவர்களை விடச் சிறந்தவர் நமக்கு யாரும் இல்லை. ஆசிரியரும், தெய்வமும் அரசனும் அவர்களுக்குப் பின்னவரே, 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றும் 'தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை' என்றும் 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்றும் முன்னோர் கூறிய முதுமொழிகள் இவ்வுண்மையை புலப்படுத்தும். பெற்றோர்கள் நமக்குச் செய்யும் உதவியும், அவர்கள் காட்டும் அன்பும் நம்மால் இவ்வளவென்று கூறமுடியாதன.

நம்மைப் பெற்றெடுக்க நம் பெற்றோர் பல விரதங்களை மேற்கொண்டார்கள்: பல யாத்திரைகள் செய்தார்கள்: அல்லும் பகலும் இறைவனை நினைத்து தவங்கிடந்தார்கள். எம்மைப் பெற்றெடுக்கும் முன்னர் அவர்களுக்கிருந்த ஆசைகள் எத்தனை! பெற்ற பின் அருமையாகவும் பெருமையாகவும் போற்றினார்கள். வேளையறிந்தும் விருப்பம் தெரிந்தும் நமக்கு வேண்டிய உணவுகளைத் தந்தார்கள். நமக்கு நோய் ஏற்பட்டால் அவர்கள் அடைந்த அல்லலும் கவலையும் அளவிடத்தக்கனவல்ல. நாம் பருவமானதும் நம்மைப் பள்ளிக்கனுப்பினார்கள். நாம் கற்று வல்லவர்களாவோம் என்றும் உயர்ந்த பதவிகளை அடைவோம் என்றும் நம் நல்வாழ்வையே எண்ணி இன்பங் கொண்டார்கள். தம்முடைய பசியையும் தேவைகளையும் பொருட்படுத்தாது நம்மிலே கண்ணாயிருந்து காத்தார்கள். அவர்களின் அன்பும் தியாக சிந்தனையும் எத்தனை! எத்தனை!!

வாழ்நாள் முழுவதும் நமக்காகவே பாடுபட்ட நம் அருமைப் பெற்றோர்கள் நம் கண்கண்ட தெய்வமாகவன்றோ போற்ற வேண்டும். அவர் சொல்லுக்கடங்கி நடக்க வேண்டும். அவர்க்கு வேண்டுவனவற்றைக் குறிப்பாலறிந்து செய்யவேண்டும். 'ஏவாமக்கள் மூவாமருந்து' என்றபடி அவர் ஏவாமலே நாம் எல்லாம் செய்தல் வேண்டும். நமது பணிவையும் அன்பையும் கண்டு அவர்கள் மனமகிழும்படி நாம் நடக்க வேண்டும் பிற்காலத்தில் தமக்கென ஒன்றும் அறியாது நம்மையே தம் பெருஞ்செல்வமாகப் பாதுகாத்த நம் தாய் தந்தையரை நாம் எக்காலத்திலும் பேணவேண்டும். முதுமை வந்து உடல் தளர்ந்த காலத்தில் அவர்கள் தேவையை அவரிருக்குமிடத்தே உதவி, அவர் உடலும் உள்ளமும் வேதனை அடையாமல் காக்கவேண்டும்.

இன்று அனேகமானோர் தம் முதிய பெற்றோர்களை விட்டு விட்டுத் தாம் தம் மனைவி மக்களோடு தனியாக வாழ்கின்றனர். பிள்ளைகளை அருகில் வைத்திருக்கப் பெறாத பெற்றோர் மற்றவர் கையை எதிர்ப்பார்த்து மனம் வாடுவர். பல இன்னல்களையும் இன்னாதவற்றையும் பொறுத்துத் தம்மை வளர்த்த பெற்றோர். முதுமையடைந்ததும் அவர்களைப் பாதுகாத்து தம்மோடு வைத்திருத்தல், இளம் புதல்வர் சிலர்க்குப் பெரிதும்

துன்பமாகத் தோன்றுகின்றன. மேலும் அவ்வறிவில்லாத இளையார் மனங் கோணாதும் வாய் காவாதும் ஏகவுங் கண்டிக்கவும் தலைப்படுத்துகின்றனர், பாடுபட்டு வளர்த்த பெற்றோர்களது அன்பும் நன்றியும் அரும்பணியும் மறந்து அவரைப் பகைவரைப் போலக் கருதி நிந்தித்தல் எத்துணைக் கொடுமை! “தாய் தெருவில் பிச்சைக்கலைகிறாள், தம்பி கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்,” என்பது போல, சிலர் தம் முதிய தாய் தந்தையரை அலையவிட்டுவிட்டுத் தாம் புண்ணிய தலங்களுக்குப் போய்த் தான தருமங்களைச் செய்ய விரும்புகின்றனர். தாய் தந்தையரினும் மிக்க தெய்வம் இல்லை என்பது, தாய் தந்தையரைப் பேணுவதில் மிக்க தவம் இல்லை என்பதும் அவர் அறியார் போலும்.

முற்காலத்திலும் இக்காலத்திலும் தாய் தந்தையரை மதித்து நடந்த பெரியோர் பலருடைய சரித்திரங்களைக்கேட்கிறோம். இராமன் தன் தந்தையின் சொல்லைச் சிரமேற்கொண்டு நாட்டை வெறுத்துக்காட்டை விரும்பினான். பீஷ்மன் தன் தந்தையின் கருத்திற்கிணங்கி தன் இன்ப வாழ்வை உதறி அழியாப் புகழ் கொண்டான். காந்தியடிகள் தாயின் சொல்லைக் காத்து வாழ்நாள் முழுவதும் ஒழுக்க சீலராய் ‘மகாத்மா’ ஆனார். தவத்தோர் பலர் உலக வாழ்வைத் துறந்தும் தாய் தந்தையரை மறந்திலராய் அவர்க்குச் செய்யும் கடமைகளைச் செவ்வனே ஆற்றியுள்ளார்கள். நூல்கள் எல்லாம் தாய் தந்தையரைப் போற்றுதலையே பெருந்தவமாகவும், உயரிய கடமையாகவும் சிறப்பித்துக்கூறுகின்றன. பாவங்களில் மிக்கது நன்றி மறத்தல், தாய், தந்தையர் செய்த நன்றியை மறத்தல், மிகப் பெரும் பாவமாகும், எனவே எமது தாய் தந்தையரை “தெய்வமாக” போற்றி வாழ்வோமாக.

**சி. தர்ஷனா**
*06f*

# ஆசான்




**பெ**ற்றோர்க்கு அடுத்த படியாய் - நாம்
போற்றிடும் தெய்வங்கள் ஆசிரியர்கள்
அன்புடன் அறிவும் கலந்து - நல்
அமுதமாய் எமக்கு ஊட்டி
வளமான வாழ்வு நாம் பெற
வழிகோலிடும் ஆசான்கள்
என்றும் எம் மனதில்
ஏற்றி வைத்த தீபங்கள்,
எம் வாழ்வின் விடிவெள்ளிகள்

தாம் கற்ற கல்வியை
தயங்காது எமக்களித்து
தரணியில் நாம் எல்லாம்
தலை நிமிர்ந்து வாழ்வதற்கு
தம்மையே தருவார்
சேவை ஒன்றே நோக்காய்க் கொண்டு
செய்யும் தொழிலில் இன்பம் கண்டு
வாழும் காலமெல்லாம்
வளமுடன் வாழ வாழ்த்திடுவோம்

**கோ. கிருஷ்ணி**
$8^C$

# அன்பின் மகிமை

அன்பு என்பது மூன்றெழுத்து; அது ஆண்டவன் அடியவர்களுக்குத் தந்த அருள்வாக்கு; அன்பு என்பது இன்பமானது; எல்லோர்வாழ்விற்கும் அது சொந்தமானது; இந்த அன்பை மாணவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொண்டால் எம்மில் பகைமை இல்லை என்பது கண்கூடு.

நாம் நல்லவராகவும் வல்லவராகவும் வாழவேண்டுமென்றால் அன்பு என்னும் மலர் எம்மிடத்தில் மணம்வீச வேண்டும். அன்பில் இருந்துதான் ஒற்றுமை என்னும் உயர்பண்பு வளர்கிறது. அன்புதான் இன்ப ஊற்று; கருணையின் வடிவம் உலகை இயக்கும் மகா சக்தி உண்மையான அன்பின் வெளிப்பாட்டிற்கு இறைவனை உதாரண புருஷராக வைத்துக் கூறுவது வழமை. "இறைவன் அன்பே உருவானவன்" என்பதே அனைத்து சமயங்களினதும் தெளிவான கூற்றாகும்.

அன்புஎன்பதுஇதயத்திலிருந்துஊற்றெடுத்துகுடும்பம், சமூகம், ஊர், நாடுஎனப்பாய்ந் தோடிவற்றாதபெருவெள்ளமாகஉலகெங்கும்பரவுகிறது. பெற்றோர்பிள்ளைஉறவு, நண்பர் களிடத்தில் ஏற்படும் உறவு, குழந்தைகளிடம் ஏற்படும் உறவு, அதிபர், ஆசிரியர் உறவு, பிற உயிர்களிடத்தே ஏற்படும் உறவு என பல கிளைகளாகப் பிரிந்து இவைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து பேரன்புக் கடலாக இறைவனிடம் சங்கமிக்கின்றது.

அன்பானது மனிதர்களுக்கு மாத்திரமன்றி எல்லா உயிர்களுக்கும் பொதுவாக உள்ளது தேனீக்களைப் பாருங்கள். ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து அன்பெனும் கூட்டைக்கட்டி தேனாகச் சொரிகின்றன. சின்னஞ்சிறு எறும்புக் கூட்டத்தைப் பாருங்கள் அவை ஒற்றுமையையும் அன்பையும் வெளிப்படுத்தி ஒழுங்கான முறையில் உணவுப் பொருட்களை காவிச் செல்கின்றன. பறவைகளைப் பாருங்கள் அவை அன்பாக ஆடிப்பாடி அழகாக விண்ணில் பறக்கின்றன. காகங்களைப் பாருங்கள் உணவுப் பண்டங்களைக் கண்டால் தன் உறவினரை அழைத்து அன்போடு உண்கின்றன. இவற்றையெல்லாம் கண்டே திருவள்ளுவரும்.

"அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்....." எனக் கூறியுள்ளார்.

இன்றைய உலகிலே இத்தகைய பரந்த அன்பினைக் காண இயலாதுள்ளது. போட்டி, பொறாமை, இரக்கமின்மை போன்ற குரோதப் பண்புகளே எங்கும் காணப்படுகின்றன. அதனாலேயே நாளுக்கு நாள் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற குரோதச்

செய்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. மனிதன் மனிதனாக வாழாது மனிதத் தன்மையை இழந்து வாழ்வதனால் உலகு பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி உள்ளது. இப்படித்தான் வாழவேண்டும் என்றிருந்த நிலைமாறி எப்படியும் வாழலாம் என்ற நிலைக்கு மக்கள் சென்றுகொண்டிருக்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். மாற்றப்படவேண்டும். இதற்கு ஒரே வழி அன்புதான்.

அன்பின் மகிமையை நோக்குவோமானால், அது பரிவுள்ளது, பொறுமையுள்ளது, தன்னலத்தை என்றுமே நாடாதது, இழிவானதை எக்காலத்தும் செய்யாதது, வன்மம் வைக்காதது, சீற்றத்துக்கு இடம் தராதது, நன்மையைக் கண்டு உள்ளம் மகிழும். அது நீடிய சாந்தம் உள்ளது, ஆனந்தத்தின் சிகரம், வாழ்வின் உயிர், அன்புதான் உலகமகாசக்தி.

எனவே விலைகொடுத்து வாங்கமுடியாத விலைமதிப்பற்ற எதனோடும் ஒப்பிட முடியாததாகிய அன்பினை மாணவர்களாகிய நாமும் எமது பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், பிற உயிரினங்கள் என அனைத்திலும் செலுத்தி சமாதானத்தின் சின்னமாகக்கொண்டு அன்பின்வழி ஒழுகி வாழவேண்டும்.

"அன்பே அகிலத்தை ஆளும் அரசு"

**ஸ்ரீ. டிலக்ஷனா**
*10F*

# நான் ஒரு வைத்தியர் ஆனால்...

**நா**ன் ஓர் வைத்தியரானால் வைத்தியவசதி பெற முடியாத ஏழைகளுக்கு இலவச மாகச் சிகிச்சையளிப்பதே எனது முக்கிய கடமையாகும். இன்று எவ்வளவு நவீன மருந்து களும் சிகிச்சை முறைகளும் நடைமுறைக்கு வந்துள்ளன. ஆனால் பல பின்தங்கிய பிரதேசங்களிலுள்ளவர்கள், ஏழைகள் ஆகியோருக்கு இவ்வசதிகளெல்லாம் கிடைப் பதில்லை.

நான் வைத்தியரானால் ஏழைகளுக்கு குறைந்த கட்டணத்தோடும் இலவசமாகவும், சிகிச்சையளிப்பதோடு, வசதியான நோயாளிகளிடம் பெறும் கட்டணங்களையும் ஏழை நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கப் பயன்படுத்துவேன். பின் தங்கிய கிராமப் புறங்களில் சமூக சேவை அமைப்புக்களின் உதவியுடன் சுகாதார சேவை நிலையங்களை உருவாக்கிப் படித்த இளைஞர் யுவதிகளுக்கு அடிப்படை சுகாதாரம் தொடர்பான பயிற்சிகளை வழங்குவேன்.

இவர்கள் மூலம் கிராம மக்களுக்கு அடிப்படைச் சுகாதாரம் பற்றிய விளக்கத்தை யளிப்பேன். அதாவது சூழலையும் வீட்டையும் சுத்தமாகப் பேணவும், தொற்று நோய்கள் வராமல் பாதுகாத்துக்கொள்ளவும் அவர்களுக்குப் போதுமான அனுபவங்களை வழங்குவேன். சில நோய்களுக்கு வீட்டிலேயே அளிக்கக் கூடியதாக முதலுதவிச் சிசிச்சை முறைகளையும், சத்துள்ள உணவுபற்றிய அறிவையும் அவர்களுக்கு விளக்குவேன்.

வாரம் ஒரு முறை அயல் கிராமங்களைத் தரிசித்து இலவச சிகிச்சை அளிப்பதுடன் கிராம சுகாதார சேவைகளை மேற்பார்வை செய்வேன். எனது பகுதியில் சிகிச்சை வசதியில்லாத நோய்களுக்கு சிகிச்சை வசதியுள்ள வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல வழிகாட்டுவேன். விசேட பயிற்சி பெற்ற வைத்திய நிபுணர்களின் சேவைகள் ஏழைமக்களுக்கு கிடைக்க என்னாலான உதவிபுரிவேன்.

நல்லமனப்பான்மை படைத்தவர்கள், நிறுவனங்கள் ஆகியோரின் உதவியை எனது சேவைக்காக கேட்டுப் பெற்றுக்கொள்வேன்.

**பொ. கஜானி**
**7F**

# இயற்கை

இயற்கை தந்த அழகு தான்
பல - அவற்றை
கவிவடிக்கச் சொன்னால்
என்னதான் செய்வேனோ!

குயில் பாடுகின்றது
சேவல் அதிகாலையில் கூவுகின்றது
சூரியன் தனது கதிர்களை
நீட்டி உதிக்கின்றான்
சூரியனை எதிர்பார்த்த - தாமரை
கதிர்பட்டவுடனே மலர்கிறது.

அல்லியோ நாணத்தால்
தலைகுனிகிறது
காக்கை கரைகிறது
மனித நடமாட்டம் கூடுகிறது
இத்தகைய காலை காட்சியை
கவிவடிப்பேனா?

இமையென்னும் ஜன்னல் திறந்து
இருள் மேகம் சூழ்ந்த
வானை சற்றே நோக்கி
தாரகைகள் நடுவே
நிலவை ரசிக்கும் போது
எத்தனை அழகு
இத்தனை அழகு கொண்ட
இரவின் அழகை ரசிக்க?
இரு கண்கள் போதுமா?

சுகமான தென்றல்
மோதிவரும் அலைகள்
இவற்றின் அழகு - தரும்
இன்பம் தான் எத்தனை எத்தனை!
மீனிடம் கதைபேசும்
மீனவனின் வலைகள்
பிஞ்சு விரல் கட்டிய
மணல்வீடு
சூரியனை தொடும்
கடல் எல்லை - என
இரையும் கடலை
கவிவடிப்பேனா?

ஒருநாள் மலர்ந்து
ஒரு நாழிகையில் உதிர்ந்து
பலர் கண்களை
மயக்கிய மாயம் தான்
என்னவோ - மலரே!

இயற்கை தான் - கொண்ட
அழகு எத்தனை
கவிவடிக்க வரிகள்
போத வில்லை
இத்தனை அழகையும்
கண்டு ஏங்குமடி
அழகை ரசிப்பவர்
மனம்!

ம. தர்சிகா
7F

# விஞ்ஞானமும் மனித வாழ்வும்

மனிதனது வாழ்வானது ஆரம்பகாலங்களில் இயற்கையை சார்ந்த ஒன்றாகவே காணப்பட்டது. அதாவது அவனுடைய உணவு, உடை, மருத்துவம் என்பன இயற்கையுடன் ஒன்றித்து அமைந்ததாக காணப்பட்டது. ஆனால் இன்று மனிதனுடைய வாழ்வானது விஞ்ஞானத்தை சார்ந்த ஒன்றாக அமைந்துவிட்டது. அவனுடைய உணவுப் பழக்க வழக்கங்கள், மருத்துவ முறைகள், நாளாந்த நடவடிக்கைகள் என அனைத்தும் விஞ்ஞானத்தைச் சார்ந்த ஒன்றாகவே காணப்படுகின்றது.

நவீன யுகத்தில் விஞ்ஞானம் பல துறைகளிலும் துரிதமான ஒரு வளர்ச்சியை அடைந்துள்ளது. கல்வி, மருத்துவம், போக்குவரத்து, தொடர்பாடல், பாதுகாப்பு நடவடிக்கைகள்என அனைத்தும்விஞ்ஞானவளர்ச்சியின்காரணமாக முன்னேற்றம்அடைந்துள்ளன. விஞ்ஞான வளர்ச்சியினூடாக ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியினால் இன்று உலகம் பூகோளக் கிராமம் என அழைக்கப்படுகின்றது அதாவது ஒரு உள்ளங்கையினுள் உலகை அடக்கக்கூடியதாக இருத்தலாகும்.

அந்த வகையில் நாம் முதலில் மனிதனுடைய நோய்களைக் குணப்படுத்தி ஆரோக்கியமான ஒருவனாக வாழவைக்கும் மருத்துவத்துறை பற்றி நோக்குவோம். ஆரம்பகாலங்களில் மனிதன் தனக்கு ஏற்பட்ட நோய்களைத் தீர்க்க நாட்டுவைத்திய முறையைப் பின்பற்றினான். ஆனால் இன்று மனிதன் தனது நோய்களைக் குணப்படுத்த செயற்கை மருத்துவ முறையை நாடுகிறான். காரணம் இன்று பலவிதமான மருந்துகளும் மருத்துவ முறைகளும் கண்டறியப்பட்டமையே ஆகும்.

நாம் நடைபோட்டுக் கொண்டிருக்கும் இன்றைய காலத்தில் தலைவலி, காய்ச்சல் எனும் நோய்களால் பீடிக்கப்படும் போது வலிநிவாரணி மாத்திரைகளையும் வேறு சில மாத்திரைகளையும் உட்கொள்கின்றோம். அதுமட்டுமல்லாது ஆரம்ப காலகட்டங்களில் கண்டுபிடிக்கப்படாத நோய்களுக்கான மருந்து வகைகளும் மருத்துவ முறைகளும் இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இன்று, எக்ஸ்ரே மெஷின், ஈசீஜி ஸ்கானேர்ஸ், சீ.ரீ.சீ ஸ்கானேர்ஸ், தொலை அறுவைச் சிகிச்சை, சத்திரசிகிச்சை, ஒளியலை மாற்றங்களில் தடங்களினூடான தொலைத்தொடர்பு முறைகள் என பல வசதிகளை இன்று நாம் விஞ்ஞான வளர்ச்சியினூடாக பெற்றுக்கொள்ளக்கூடியதாய் உள்ளது. இவற்றினூடாக இலகுவாக உடலைப் பரிசோதித்துக் கொள்ளவும் அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளவும் முடிகிறது.

ஆரம்பகாலங்களில் இதயநோயைக் குணப்படுத்துவதற்கான மருத்துவ முறைகள் காணப்படவில்லை. ஆனால் இன்று சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்தக்கூடியதாய் உள்ளது. ஆரம்ப காலங்களில் சிறுநீரகங்களில் கற்கள் உண்டாவதனைத் தடுப்பதற்கு வாழைப்பூவை உட்கொண்டனர். இன்று கதிரொளிகளைப் பயன்படுத்தி அதனை குணப்படுத்துகின்றனர். இந்தவகையில் விஞ்ஞானம் மனிதவாழ்வுடன் பின்னிப் பிணைந்த ஒன்றாய் காணப்படுகிறது எனலாம்.

ஒரு மனிதனுடைய வாழ்விற்கு அழகைக் கொடுப்பது கல்வி என்றால் அது மிகை ஆகாது. ஆரம்பகாலங்களில் குருகுலக் கல்வி முறையே காணப்பட்டது. இன்று கணனித் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி கல்வியினை கற்கவும் கற்பிக்கவும் முடிகிறது. விஞ்ஞான வளர்ச்சியினூடாக இன்று நேர மீதப்படுத்தலுடனும் ஒரே தடவையில் அதிக மாணவர்களுக்கு கல்வியை வழங்கக்கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

கணனியை அடிப்படையாகக் கொண்ட கல்வி, இணையத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வி கற்றல், கற்பித்தல் முறைகள் என்பன வளர்ச்சி அடைந்துள்ளன. விஞ்ஞான மானது கல்வி, மருத்துவத்துறைகளில் மட்டுமல்ல தொடர்பாடல், போக்குவரத்து என்பன வற்றிலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னைய காலங்களில் தந்தி, புறா, அன்னப்பறவைகளைத் தூதுவிடுதல் என்பத னூடாக தங்களுடைய தகவல்களைப் பரிமாறிக்கொண்டனர். அவைகள் காலதாமத மானவையாகவும் காணப்பட்டன. ஆனால் இன்று உடனுக்குடன் தகவல்களைப் பரிமாற்றம் செய்யும் அளவிற்கு விஞ்ஞானம் வளர்ந்துள்ளது என்றால் மிகையாகாது. ஸ்கைப் எனும் ஓர் தொடர்பாடல் முறையினூடாக உலகின் எம்மூலையில் இருந்தாலும், ஒருவரையொருவர் பார்த்துக் கதைக்கும் வசதி இதனூடாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இனி நாம் போக்குவரத்துத் துறையில் விஞ்ஞானம் ஏற்படுத்தியுள்ள முன்னேற்றத்தினை நோக்குவோம். அன்று கால்நடையாகவும், மாட்டு வண்டிகளூடாகவும் போக்குவரத்துக் களை மேற்கொண்டனர். ஆனால்இன்று குறைந்த நேரவிரயத்துடன் போக்குவரத்துக்களை மேற்கொள்ளக்கூடியதாய் உள்ளது. மிகவும் விரைவாகச் செல்லக்கூடிய கார்கள், பேரூந் துகள், தொடரூந்துகள், மோட்டார்ச் சைக்கிள்கள் என அனைத்தும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இந்த சந்தர்ப்பத்தில் விஞ்ஞான வளர்ச்சியின் ஒரு பரிமாணமான நனோத் தொழில் நுட்பம் பற்றிக் கூறுவது எனது கடப்பாடாகும். சிறுதுணிக்கைகளை அடிப்படையா கக்கொண்டு மேற்கொள்ளும் ஒரு தொழில்நுட்பமே நனோத் தொழில்நுட்பமாகும். இத் தொழில்நுட்பமானது உணவு, உடை என எல்லாத் துறைகளிலும் பயன்படு கிறது. உதாரணமாக நாம் அணிகின்ற ஆடையை எடுத்துக் கொள்வோமானால் அவற்றில் சிறிய துளைகள் காணப்படும். அவற்றில் தூசு துணிக்கைகள் படியும்போது அதனை அகற்றுவது மிகவும் கடினமானது. அவ்வேளைகளில் இத்தொழில் நுட்பத்தைப் பயன்

படுத்துவது மிகவும் சிறப்பானது. இவ்வாறு மனித வாழ்க்கைக்கு விஞ்ஞான வளர்ச்சி சாதகமாய் அமைந்து பல நன்மைகளைப் பெற்றுக்கொடுத்தாலும் அது பாதகமாய் அமைந்து தீமைகளையும் ஏற்படுத்திக் கொண்டே வருகிறது. நாம் எமது நோயைக் குணப்படுத்துவதற்காக மருந்துகளை உட்கொள்கிறோம். அவற்றினால் வலி குணமாகும். அதேவேளை பாதகமான விளைவுகளும் எமக்கு ஏற்படுகின்றன. சிலர் இந் நவீன மருத்துவமுறைகளால் உயிர் இழந்தோரும் உள்ளனர்.

அடுத்து நாம் போக்குவரத்துத் துறைகளில் எவ்வாறு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன எனப் பார்ப்போம். தற்போது ஏற்பட்டுள்ள அதிக வாகன நெரிசல்களாலும் வாகனங்களை அதிக வேகத்துடன் செலுத்துவதனாலும் வாகன விபத்துக்கள் தோன்றுகின்றன. இவற்றினால் பலர் உயிர் இழந்தும் உள்ளனர். புதிய வாகனங்கள் அறிமுகமாகும் வேளை அவற்றை நுகர்வு செய்ய விரும்புவதனாலும் வீடுகளில் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. இது விஞ்ஞான வளர்ச்சியின் பாதகமான விளைவுகளாகும்.

ஆரம்ப காலங்களில் மனிதன் தனது வேலைகளை தானே செய்து கொண்டான். இதனால் அவனது உடலின் மூட்டுக்களுக்கு தேவையான உடற்பயிற்சிகள் அதனூடாக கிடைத்தது. ஆனால் இன்று இயந்திரமயமான ஒரு வாழ்க்கையை வாழ்கிறான். இதனூடாக அவனின் உடலுக்குத் தேவையான உடற்பயிற்சி இல்லாமல் போகிறது. இதனால் மூட்டுக்கள் தொடர்பான நோய்களும், கொழுப்புப் படிவுகளின் அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது.

எனவே நாம் விஞ்ஞானத்தின் வளர்ச்சியினூடாகக் கிடைக்கும் நன்மைகளை இனிதே பெறுவதுடன் அதன் பாதகமான விளைவுகளை தடுக்கவேண்டும். அப்போதுதான் மனிதவாழ்வு இனிமையாக அமையும். மனித வாழ்வு மட்டுமல்ல இவ்வுலகமும்தான் சிறக்கும்.

"வாழ்வோடு விஞ்ஞானமும் இணைந்து வளர்க"

**இ. டயானி**
11A

# வெகுசனத் தொடர்பு சாதனங்களினால் விளையும் நன்மை தீமைகள்

இந்த 20ஆம் நூற்றாண்டில் மக்களின் அன்றாடத் தேவைகளில் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் முக்கியமான தேவையாகி விட்டது. இச் சாதனங்களினால் உலகமே சுருங்கி எமது கைக்குள் அடங்கிவிட்டது போலக் காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி இச்சாதனங்களினால் பல்வேறுபட்ட மானிடத் தேவைகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன. இச் சாதனங்களினால் பல நன்மைகளும், தீமைகளும் உள்ளன. அவற்றை எடுத்து நோக்குவோம்.

வெகுசனத் தொடர்பு சாதனங்களென கணனி, இணையம், முகநூல், தொலைபேசி, தொலைக்காட்சி போன்றவற்றை குறிப்பிடலாம். கணினியை எடுத்துக்கொண்டால் இது ஒரு தகவல் திரட்டும் சாதனமாகும். கணனி மூலம் எமக்குத் தேவையான பல்வேறுபட்ட துறைகள் சார்பில் பல்வேறான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு மிக இலகுவாக தகவல்களை நொடியில் பெற்றுக்கொள்வதால் எமது நேரத்தைக் குறைத்துக்கொள்ளலாம். ஆனால், இவ்வாறு கணனியின் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்வதனால் நம் மாணவ சமுதாயத்திடம் நூலகம் சென்று நூல்கள் வாசித்தல், தேடிக்கற்றல் என்பன குறைந்துகொண்டே செல்கின்றன. அதாவது தகவல்களை சேகரிப்பதற்கு நூல்களை நாடாமல் கணனியை நாடிச் செல்வதால் வாசிப்புப் பழக்கம், மொழிவளம் என்பன குறைவடைந்து செல்வது நாம் அனைவராலும் வருந்தத்தக்க விடயமாக உள்ளது.

அடுத்ததாக இணையம் பற்றிப் பார்ப்போம். இணையத்தளம்மூலம் எமது வெளி நாட்டு சொந்தபந்தங்களை நேரடியாக கண்டு கதைப்பது போன்ற ஒரு வசதி ஏற்பட்டுள்ளது. இதனால் எமது உறவுகளுக்கு ஒரு மன ஆறுதல் கிடைக்கும். ஆனால் இந்த சிறப்பான வசதியை எம் இளம் சமுதாயம் தவறான பாதையில் பயன்படுத்துகின்றனர். இவ்வாறான தவறான பாதையில் சென்று சமூக கலாசார சீரழிவுகள் பல நிகழ்வதற்கு இது வழி வகுத்துள்ளது. இணையம் என்பது நமது நல்ல தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்தி எமது வாழ்வை பயனுள்ளதாக மாற்றிக்கொள்ள நமது இளைஞர்கள் முன்வர வேண்டும் என்பதை நாம் அனைவரும் மனதில் கொள்ளவேண்டும்.

முகநூல் என்ற அடிப்படையில் எடுத்து நோக்கினால், இதனால் நன்மையை விட தீமைகளே அதிகமாகக் காணப்படுகின்றன. அதனுள் சமூக சீரழிவுகள், கலாசார

சீர்கேடுகள், சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள், பெண்களை வன்முறைக்கு உட்படுத்தல் போன்றவற்றை எடுத்துநோக்குவோம்.

எமது சமூகம் மிகவும் அழகானது. அதனுள் வசிக்கும் மக்களைத்தான் அது சீரழிவதற்கு மிகமிக முக்கிய காரணியாகக் கருதலாம். சமூகத்தில் வாழும் மாணவர்கள், சிறுவர்கள், இளைஞர்களால் முகநூல் பாவனைக்குட்படுத்தப்படுகிறது. இம் முகநூலினால் இனம் தெரியாத பல்வேறு நாடுகளில் வசிப்பவர்களுடன் நட்புறவை மேற்கொண்டு அந்த நட்பினால் இவர்கள் பல்வேறு சிக்கல்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவ்வாறு ஏற்படும் பிரச்சினையின் காரணமாக சமூகம் பாதிக்கப்பட்டு சமூக சீரழிவுகள் ஏற்படுகின்றன.

கலாசாரம் என்பது ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறாகக் காணப்படுகிறது. ஆனால் எமது தமிழ் கலாசாரம் மிகவும் சிறப்பானது. வெவ்வேறு, மதம் இருப்பினும் எமது கலாசாரம் ஒன்றுதான். எமது கலாசாரம் சீர்கெட்டுப்போவதற்கு இந்த முகநூல் ஒரு முக்கிய காரணமாகிவிட்டது. இது மட்டுமன்றி பெண்கள், சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் ஏற்படவும் முகநூல் ஒரு காரணமாகிவிட்டது. இவ்வாறு பல தீமைகளை கொடுக்கும் இந்த முகநூலை நாம் உபயோகிப்பதை தவிர்த்து நன்மை தரும் ஒரு விடயமாக முகநூலை மாற்றி அமைக்கவேண்டும். மாணவர்கள் கல்வி கற்க வேண்டிய நேரங்களில் முகநூலில் இருந்து அரட்டை அடிப்பதும், குதூகலிப்பதுமாக இருந்தால் எமது நாட்டில் கல்வி எவ்வாறு வளர்ச்சி அடையும்? இக்கேள்வியை ஒவ்வொரு மாணவனும் தமது மனதில் கொண்டு ஒரு சிறந்த கல்வி அறிவு படைத்த சமுதாயத்தைக் கட்டி எழுப்ப வேண்டும்.

தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு அலெக்சாண்டர் கிரெகெம்பலினால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு உன்னதமான படைப்பு தொலைபேசி ஆகும். இத் தொலைபேசியினால் எமது பல தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. குறிப்பாக நாம் எங்கு சென்றாலும் என்ன பிரச்சினையில் சிக்கித் தவித்துக்கொண்டிருந்தாலும் தொலைபேசியைப் பயன்படுத்தி எமது வீட்டாருக்கு தகவலை வழங்கி பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளலாம்.



இவ்வாறு எமக்கு துன்பங்களும் பிரச்சினைகளும் நேருமிடத்து தொலைபேசி இருந்தால் அதன் மூலம் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளலாம். இருப்பினும்

தொலைபேசியினால் தீமைகளும் ஏற்படக்கூடும். எவ்வாறெனில் அறிமுகம் அற்றவர்களிடம் எமது தொலைபேசி இலக்கம் கிடைத்தால் அவர்கள் தொடர்ந்து எமக்கு அழைப்புக்களை விடுத்து பல தொல்லைகளை ஏற்படுத்தி எம்மை சிரமத்துக்குள் உள்ளாக்கி விடுவார்கள்.

அடுத்து தொலைக்காட்சியை எடுத்துநோக்கினால் உள்நாட்டு, வெளிநாட்டுத் தகவல்களை நாம் தெரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. அதுமட்டுமல்லாது பல்வேறு அறிவியல் தொடர்பான தகவல்களையும் நாம் பெற்றுக்கொள்ளமுடியும். தொலைக்காட்சியினால் எப்படி நன்மைகளை நாம் பெறுகின்றோமோ அதேபோல் தீமைகளையும் எதிர்நோக்குகின்றோம். அதாவது பல்வேறு நாட்டுக் கலாசாரம், பழக்க வழக்கங்கள் என்பவற்றைப் பின்பற்றி எமது நாட்டின் சிறந்த கலாசாரத்தை மாற்றிக்கொள் கின்றோம். இதனால் எமது நாட்டின் பாரம்பரிய பண்புகளை நாம் பின்பற்றாமல் வெளி நாட்டுக் கலாசாரத்தைப் பின்பற்றி எம் தமிழ்மொழியினையும் இந்துமதக் கலாசாரத்தி னையும் புறக்கணிக்கின்றோம்.

இவ்வாறு பல நன்மைகளையும் தீமைகளையும் தரும் இந்த வெகுசனத் தொடர்பு சாதனங்களை நாம் சிறந்த முறையில் பயன்படுத்தி உச்ச பயனைப் பெற்று நம் கலாசாரத்தைப் பாதுகாப்போம். நல்ல வழியில் சென்றால் நல்ல பயனைப் பெறலாம் என்பதைக் கருத்தில் கொண்டு நம் வாழ்வை பயனுள்ளதாக மாற்றி அமைத்துக்கொள்வோம்.

**அ. டிலக்ஷிகா**
11E

# நினைவுகளே.....

குறு குறு நடை நடந்து
குதலை மொழி பேசி
குவலயத்தில் உதித்திட்ட
குழந்தைகள் நாங்கள்

இந்து மகளிர் அன்னை மடியினிலே
இனிதான அரவணைப்பில்
இணைந்து தவழ்ந்து வளர்ந்து
இன்று பிரிவு எனும் சோகத்தில்

அன்னையவள் அரவணைப்பில்
அன்பு மழை தினம் பொழிய
அனுதினமும் நனைந்தோம்
அந்தோ, எம் காலம் முடிகிறதா?

சிட்டுக் குருவிகளாய் சிறகடித்து
பட்டாம் பூச்சிகளாய் நாம் பறந்து
எட்டு வருடங்கள் செய்துவிட்ட
கெட்டித்தனங்களின்இறுதிக்காலம்

பள்ளிக்காலமதில் நாம்புரிந்த
பருவத்திற்கேயுரிய பண்புகள்
பசுமையான புல்வெளியாக
பரந்து நெஞ்சில் விரிகிறது

புத்தகங்கள் பலபடித்து
வித்தகர்களாய் வெளியே
சத்தமிட்டு மெத்தனமாய்
வைத்த பல விமர்சனங்கள்...

அன்பு வழிதனில் எமக்கு
அறங்கள் பல போதித்து
அகிலத்தில் உயர்ந்தோங்க
அரிய வழிகாட்டிகளாய்
எம் ஆசான்கள்

கற்ற வித்தை வளர்ந்திட
வெற்றி வந்து மலர்ந்திட
பாதை காட்டும் வள்ளல்களின்
பாதங்களை பணிகின்றோம்

சின்ன சின்ன தத்துவம் பேசி
சிரிப்புடன் கலகலப்பாய் நண்பிகளோடு
சின்ன சின்ன குறும்புகள் புரிந்து
சிறகடித்து பறந்து மகிழ்ந்தோம்
இவை எல்லாம்
சிதையாத நினைவுகளாய்
என்றும் நெஞ்சில்

**ச. நிஷாங்கி**
**விஞ்ஞானப்பிரிவு 12B (2015)**

# இலக்கியங்களில் பெண்

இலக்கியம் சமூகத்தின் உற்பத்தி மட்டுமல்லாமல் சமூக மதிப்பீடுகளை நிலை நிறுத்தவும் பிரதிபலிக்கவும் புதிய பார்வைகளை அறிமுகப்படுத்தவும் உதவுகின்ற கருத்துருவாக்கச் சாதனங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இந்தவகையில் இலக்கியம் மூலமாகச் சமூகவாழ்வில் பெண்களின் பங்கையும் மதிப்பையும் அறிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது.

தமிழ் இலக்கியத்தில் பெண் பற்றிய புரிதலை ஏற்படுத்த இலக்கியங்களை அவற்றின் சூழலமைவுக்குட் படுத்திப் பார்ப்பதோடு அக்காலகட்டத்தில் மேனிலை பெற்றுள்ள கருத்து நிலைகளையும் சரியாக இனங்கண்டு கொள்ளவேண்டும். இவ்வாறு காலங்காலமாகச் சமூகத்தில் ஏற்பட்டுவந்த மாற்றங்களின் வழியே பெண் பற்றிய முழுமையை விளங்கிக் கொள்ளவேண்டும்.

உலகின் ஆதிச்சமூகம் தாய்வழிச் சமூகம் என்பதைப் பல்வேறு சமூகவியல் அறிஞர்கள் விளக்கியுள்ளனர். இங்கு பெண்ணே உணவு சேகரிப்பவளாக இருந்திருக்கிறாள். தாயின் மூலமாகவே குழந்தைகள் அறியப்பட்டனர். பெண்ணே ஆற்றல்மிக்கவளாக உற்பத்தித்திறன் கொண்டவளாக அதிகாரம் படைத்தவளாக இருந்திருக்கின்றாள்.

படிப்படியாக தனியுடமையும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியும் ஏற்பட்டபோது ஆணின் கை மேலோங்குகிறது. தன் வாரிசு, தன் சொத்து எனும் தன்னாதிக்க முனைப்புப் பெற்றதும் கற்புக்கோட்பாடு பாலுறவுக்கோட்பாடு முளைவிட்டன.

தாய்வழிச் சமூகத்தின் எச்சமாகவும் தந்தை வழிச்சமூகத்தின் தொடக்கமாகவும் விளங்கும் பெண்குறித்த படிமத்தை ஆரம்பகால இலக்கியங்களில் காணலாம். ஆண்கள் செய்யும் தவறை தட்டிக் கேட்கும் உரிமை மறுக்கப்பட்டிருந்ததை இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது.

"இளம்பல செல்வர் வளம் தபவாங்கி
நுண்தாது உண்டு வறும்பூத் துறக்கும்
மென்சிறை வண்டினம் மானப் புணர்ந்தோர்
நெஞ்சு ஏமாப்ப இன்றுயில் துறந்து"

என்ற பாடலின்மூலம் ஆண்கள் வேறு பெண்ணை நாடிச்செல்லும் மரபு இருந்துள்ளதைக் காட்டுகின்றது. ஆனால் அதே காலப்பகுதியில் பெண்கள்.

'இம்மை மாறி மறுமை ஆயினும்
நீயாகியர் என் கணவனை........" என்ற மனநிலையோடு வாழ்ந்துள்ளமையை அறியமுடிகின்றது.

தம் கணவனையே இறைவனாகத் தொழவேண்டும் என்றும் அதுவே கற்புடைய பெண்டிருக்கு அழகு என்பதையே உலகப் பொது மறையாகப் போற்றப்படும் திருக்குறளில் வலியுறுத்துவதை நோக்கலாம்.

"தெய்வம் தொழா அள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

எனப் பெண்ணின் கற்புசார் நெறிகளையும் காதலியாக, மனைவியாக, தாயாக எனப்பல தளங்களில் பெண்ணின் நிலையையும் எடுத்துக்காட்டுகின்றது.

இவற்றிற்கு மாறாக வீரஉணர்வு செறிந்த நெஞ்சுரம் கொண்ட பெண்களையும் அக்கால இலக்கியங்களில் காணமுடிந்துள்ளது.

"புலி சேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே"

எனப் படைவீரர்களைப் பெற்ற தாயார், மனைவியர் வீரம், நாட்டுப்பற்று, சமூகக் கடமை கொண்டவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். அத்தோடு கல்வி கற்று சமூக அந்தஸ் துக்கள் பெற்ற சில பெண்களையும் இனம் காணமுடிகின்றது. பெண்பாற் புலவர்களின் செய்திவழி இதை அறியமுடிகின்றது.

பெண்கள் தலைவியர்களாக இல்லாமல் பாலியல், கோபம், காம இச்சை, பேராசை, நிலையாமை, துன்பம், அழிவு போன்றவற்றுடன் இணைத்துப் பார்க்கப்பட்டுள்ளனர். கற்புக் கரசிக்குரிய குணாம்சங்களாக அதிகாலை எழுதல், நன்றாகச் சமைத்தல், சுவைகுன்றாது பரிமாறல், விருந்தினரை உபசரித்தல், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு உடையவளாய் சித்தரிக்கப்பட்டுள்ளாள்.

ஐரோப்பியருடைய வருகையினால் தமிழ்ச் சூழலில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படத் தொடங்குகின்றன. மேனாட்டு கலாச்சாரப் பகிர்வு, தேசிய வாதம், சமூக சீர்தி ருத்தம் போன்ற காரணிகளால் புதிய சமூக சீர்திருத்தத்தின் ஒரு கூறாகச் சமகாலப் பெண் கள் நிலைகுறித்தும் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

பெண்களின் அடிமை நிலையினை நீக்க விதவைகள் மறுவாழ்வு, பெண் கல்வி, பாலியல் விவாக எதிர்ப்பு, பலதார மணத்தடை, உடன்கட்டை ஏறத்தடை போன்ற கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன. மேனாட்டுப் பரிச்சயத்தின் விளைவினால் ஏற்பட்ட இலக்கிய வடிவங்களாகிய நாவல், சிறுகதை போன்றவற்றில் பெண்களின் பிரச்சினைகள் பலவும் பேசப்பட்டுள்ளன. பெண் பற்றிய பாரம்பரியமான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு புதிய விவாதங்கள் முன்வைக்கப்பட்டன.

'பெண்' எனும்போது அவளை ஒரு 'இயற்கை உயிரி' என்பதைவிட அழகு, சுகம், மென்மை, வலிமையற்றதன்மை, அடக்கம், பொறாமை, தியாகம், கருணைபோன்றபலபடி மங்களை நிலைநிறுத்துவதில் இலக்கியங்கள் பங்கு வகிக்கின்றன.

பெண் எப்பொழுதும் எதிர்நிலைகளுக்கிடையில் வைக்கப்படுவதையே இலக்கியம் மிகவும் தெளிவாகச் சித்திரித்துள்ளன. அவள் சக்தியாகவும் பலவீனத்துக் குரியவளாகவும் பார்க்கப்படுகின்றாள். தூய்மையானசுமங்கலியாகவும் இவையற்ற நிலையில் ஒதுக்கப்படுபவளாகவும் இருக்கின்றாள். ஆக்கத்திற்குரியவளாகவும் அழிப்பிற் குரியவளாகவும் காணப்படுகிறாள். பல தளங்களில் சிக்கலுக்கு ஆட்படுபவளாக முரண் வெளிக்குள் அடைக்கப்பட்டு விடுபடமுடியாதவளாக வாழ்ந்து வந்துள்ளமையைச் சான்றுகள் காட்டுகின்றன.

அழகும் குணமும் ஒழுங்கும் நிறைந்த கதாநாயகி காலம் முழுதும் துன்பத்தில் உழன்றும் பொறுமையாகக் காத்திருக்க அவை விதியின் துணையால் மாறுவது போன்ற தன்மைகளில் காணப்படுகின்றன. தொகுத்துநோக்கும் போது ஆணின் அதிகாரத்திற்குப் பலியாகிய பெண்கள் ஆண்களே உலகம் என்று தனக்கென ஒரு தனிப்பட்ட வாழ்வின்றி அவனே யாவும் என்று நம்பிக்கை கொண்டவர்களாக பெண்கள் திகழ்கின்றார்கள். உடல் ரீதியாகப் பலவீனமானவர்களாகக் கருதப்படும் அதேவேளை கவர்ச்சியான நுகர்பொருளாக வடிவமைக்கப்பட்ட பெண்கள் என்று பல வகைப்பட்ட பிம்பங்களினையே தமிழ் இலக்கியம் கட்டமைத்துள்ளது.

இலக்கியம் காலத்தைப் பிரதிபலிப்பனவாக அமைகின்றன என்ற கருத்து நிலவுகின்றது. ஆயினும் பெண்களைப் பொறுத்தவரையில இப்பிரதிபலிப்பு முழுமையாக இருந்ததாகக் கூறமுடியாது. பெண் பற்றிய சித்திரிப்பு ஒரு வகையான புனைவு யதார்த்தமாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

எனினும் அண்மைக் காலங்களில் நாவல், சிறுதை முதலியவற்றில் பெண் பற்றிய படிமங்கள் சிறிதுசிறிதாக மாற்றத்துக்குள்ளாகிவருவதை அவதானிக்கலாம். பெண் படைப்பாளிகளின் படைப்புகளிலும் இதனை அதிகளவில் காணமுடிகிறது. இதனால் பெண்கள் இதுவரை தங்களுக்கு மறுக்கப்பட்ட மறைக்கப்பட்ட உண்மைகளை எல்லாம் வெளிப்படுத்த முடிந்துள்ளது.

இன்று பெண்ணியம் குறித்த சிந்தனைகளின் அடிப்படையில இலக்கியங்களில சொல்லப்படாத பல செய்திகளும் கூறப்பட்டு வருகின்றன. இன்றைய இலக்கியங்கள் பெண்ணைச் சுதந்திரமான ஓர் இயற்கை உத்தியாக அவளை அவளாகவே வாழ்வதற்கு அனுமதிப்பதுமான தளத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதைக்காணலாம்.

**உசாத்துணை**


1. மங்கை - 2001
2. செல்வி திருச்சந்திரன் 1997, தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்ணிலை நோக்கு
3. புறநானூறு
4. பிரேம. இரா 2001, பொன் மரபிலும் இலக்கியத்திலும்



**திருமதி ர. பிரதீபன்**

B.A (Hons) Dip.Edu,M.A,M.ed.

# மொழிப் பெருமை காப்போம்...!

உலகில் உள்ள மொழிகள் ஏறக்குறைய 4000 என மொழியியல் அறிஞர்கள் கணக் கிட்டிருக்கிறார்கள். எல்லா மொழிகளும் ஒரே காலத்தில் தோன்றியவை அல்ல. ஆனால்எங்கள் தமிழ் மொழியோ நினைப்பிற் கெட்டா நெடுங்காலத்தின் முன் தோன்றியதென்றும் தமிழர்கள் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன்தோன்றிய மூத்த குடியினர் என்றும் பெருமை பெறுகின்றனர்.

“திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
பொங்கு கடல் இவற்றோடும் பிறந்ததமிழ்”

எனப் பாவேந்தர் தமிழ்மொழியின் தொன்மை பற்றி அழகாகக் கூறியுள்ளார். நம் தாய்மொழி தொன்மையானது மட்டுமல்ல இலக்கிய இலக்கண வளம்மிக்கது. நீண்ட வரலாற்றையும் புகழ்மிக்க பொற்காலங்களையும் உடையமொழி. புலவர்கள் யாத்தமொழி, கவிதைகள் கொஞ்சும்மொழி, காலத்தாலும், கவினுறு வளத்தாலும் கடலெனப் பரந்து கிடக்கும் மொழி, எங்கள் உயிருடன் கலந்தமொழி, உலகம் முழு வதும் எண் கோடி மக்களால் பேசப்படும் மொழி.

இதன் வரலாறும் அதையொட்டிய பண்பாடும் போற்றுதற்குரியது. மனித சிந்தனைகளை உணர்வின் நுட்பங்களைத் தெளிவாக வெளிப்படுத்தும் ஆற்றல் தமிழுக்கு உண்டு. இயற்றமிழ் இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்ற முத்தமிழோடு அறி வியல் தமிழையும் சேர்த்து வளர்த்துவரும் நம்தமிழ் செவ்வியல் மொழியாகத் திகழ் கிறது. தொன்மை தனித்தன்மை, பொதுமைப்பண்பு, நடுநிலைமை தவறாத் தன்மை, பண்பாடு, கலைப்பட்டறிவு வெளிப்பாடு, இலக்கிய வளம், உயர்சிந்தனை. மொழிக்கோட்பாடு என்பவற்றை கொண்டிருப்பதால் செம்மொழி அந்தஸ்தைப் பெற்றுள் ளது.

கல்வியையும் மொழியையும் கடவுளாக மதித்து மகத்தான அந்தஸ்துக் கொடுத்தது தமிழர் சமூகம். தமிழர் வாழ்வியல் பெருமைகளுக்கெல்லாம் காரணமான செம் மொழியாம் நம்தமிழ்மொழியின் சீரிளமைத்திறம் இன்றுவரை பொலிவுபெற்று நிற்பது அதன் உயிர்த்தன்மைக்குச் சான்றாகும்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"

என்றார் புரட்சிக் கவிஞர். தமிழ் வாழ்ந்தால், தமிழ் வளர்ந்தால் எல்லாத்துறையிலும் தமிழ் ஓங்கி இருந்தால் தமிழர் வாழ்வு வளமுள்ளதாக இருக்கும் என அவர் எண்ணினார்.

"யாதுமூரே யாவரும் கேளிர்" என்ற உயரிய கோட்பாடும் வள்ளுவர் காட்டிய வாழ்வியல் நெறியும் போற்றி வாழ்நதமையால் தமிழர் பண்பாடு தரணியில் தனக்கென தனியிடம் பெற்றிருந்தது. இத்தகைய மொழியை வாழ்வாகக் கொண்ட நம்தமிழர்கள் இன்று யாது செய்கிறார்கள்? அண்மைக்கால அனர்த்தங்களை எல்லாம் கடந்து எழுச்சியுறத் தொடங்கிய வேளையில் பயிர்களுக்குள் களைகள் போல எழும் சமூகச் சீரழிவுகளை என்னவென்று சொல்வது? உலகத்தின் தலைசிறந்த வாழ்வியல் தத்துவங்களைக் கொண்டு வலம்வந்த தமிழினத்தின் இன்றைய நிலை "நல்லதோர் வீணை செய்து அதை நலங்கெடப் புழுதியில் எறிந்த"தாகிவிட்டது.

இன்றைய எமது மக்களிடம் குறிப்பாக இளைஞர்களிடம் தமிழ் உணர்வு தமிழ்ப் பற்று, தமிழ் இலக்கிய நாட்டம், படைப்பாற்றல், முற்போக்குச் சிந்தனை என்பன மிக அருகிவருகிறது. ஒரு சமுதாயம் சிறுவர்களையும் பெண்களையும் கொள்கைமிகு முதியோர்களையும் எவ்வாறு பேணி பாதுகாத்து வருகிறது என்பதை வைத்துத்தான் அச்சமுதாயத்தின் எதிர்காலம் வளமுடையதாக அமையும். அநாதை இல்லங்களும், அபலையர் புகலிடங்களும், முதியோர் இல்லங்களும் பெருகிவருவது தமிழ்ச் சமுதாயத்தின் சிறப்புக்கு உகந்ததா? நாம் பிறமொழி ஆதிக்கத்தால் சுயமிழந்து போகலாமா? தொழில்நுட்ப வளர்ச்சியின் அதிவேகப் போக்கினால் நின்று நிதானிக்க நேரமில்லாமல் எங்கள் தமிழ்ப் பண்பாடுகளைத் தொலைத்தபடி போய்க்கொண்டிருக்கிறோம். இந்தநிலை தொடர்ந்தால் எதிர்காலத் தமிழ்ச் சமூகத்துக்கு நாம் எதைக் கொடுக்கப்போகிறோம்? சிந்தியுங்கள்.

**திருமதி சத்தியபவானி செபமாலைதாசன்**
B.A. Dip. Edu. M.A

# தமிழ்ச் சமூகத்தின் தொடக்க காலத் தகவல் தொடர்பு முறைமைகள்

## அறிமுகம் :

மனித வாழ்க்கைக்கு உறவுகள் முதன்மையாதல் போல தகவல் தொடர்பும் மனிதனின் அன்றாட வாழ்க்கையில் மிகமுக்கியமான இடத்தினைப் பெறுகின்றது. 'தகவல் தொடர்பு' என்பது காலம் காலமாக நடந்து வரும் ஒரு செயற்பாடாகும். மனிதன் எப்போது தோன்றினானோ அப்போதே தகவல் தொடர்பும் தோன்றிவிட்டது எனலாம். மனிதனின் கூட்டு வாழ்க்கையில் செய்திப் பரிமாற்றம் பிரதான இடத்தைப் பெறுகின்றது. தன்னைச் சுற்றி நடப்பவற்றை அறிந்துகொள்ளும் ஆர்வம் மனிதனுக்கு இயல்பாகவே அமைந்துள்ளது.

தேவைகளை உணர்த்துவதற்கும் கருத்துக்களைக் கூறுவதற்குமென 'மொழி' ஓர் அரிய கருவியாகப் பயன்பட்டுள்ளது. 'மொழி' தோன்றுவதற்கு முன்பு மனிதன் பல்வேறு முறைகளில் தொடர்பாடலை நிகழ்த்தினான். இம்முறைகள் 'சொல்லாத் தகவல் தொடர்புகளாக' (Non - Verbal Communication) அமைந்தன. அச்சின் வருகை மொழி வளர்ச்சிக்கு வித்திட்டது. இது மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் வித்திடுவதாக அமைந்தது. 19ஆம் நூற்றாண்டில் அறிவியலில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாகத் தொலைபேசி, தொலைவழி அச்சு முதலானவை அறிமுகமாயின. 20ஆம் நூற்றாண்டில் அறிவியல் அபரிமிதமான வளர்ச்சி அடைந்தது. வானொலி, தொலைபேசி, கணிப்பொறி, செயற்கைக்கோள் முதலியன தொடர்பாடலில் புதிய பரிமாணத்தைக் கொண்டு வந்தன. இவ்வாறான வளர்ச்சியானது தகவல் தொடர்பை எளிமையானதாகவும் விரைவானதாகவும் மாற்றியமைத்தது.

இக்கட்டுரையானது தமிழ்ச் சமூகத்தில் தொடக்க காலத்தில் பயில்நிலையில் இருந்த தொடர்பாடல் முறைமைகளைப் பொதுநிலையில் அறிமுகம் செய்வதாக அமைகின்றது.

## தொடர்பியல் (Communication)

ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழலில் செய்தி அனுப்புநருக்கும் (Sender) பெறுநருக்கும் (Receiver) இடையே நிகழும் செய்திப் பரிமாற்றச் செயலைப் பொதுவாகத் தொடர்பியல் எனக் குறிப்பிடலாம். தொடர்பியலின் வழியே செய்திகள், எண்ணங்கள், கருத்துக்கள், உணர்ச்சிகள், திறமைகள் முதலியன பரிமாற்றப்படுகின்றன. இச்செயற்பாட்டில் அனுப்புநர் (Sender), செய்தி (Message), அனுப்பும் முறை (Channel), பெறுநர் (Receiver) ஆகிய நான்கு முக்கிய கூறுகள் முதன்மை பெறுகின்றன.

## தொடக்ககாலத் தகவல் தொடர்பு

தொடக்ககாலத் தகவல் தொடர்பு என்பது மரபுவழித் தகவல்தொடர்புச் சாதனங்களிலேயே பெரிதும் தங்கியிருந்தது. கண் அசைவுகளும், அங்க அசைவுகளும், பல்வேறு வகையான ஒலி எழுப்புகைகளும், பிறவும் இக்காலத் தகவல் தொடர்பு முறைகளில் முக்கியத்துவம் பெற்றிருந்தன. இம்முறைமைகளால் மேற்கொள்ளப்படும் தொடர்பு என்பது கண்ணுக்கும், செவிக்கும் புலனாவதாகக் காணப்பட்டிருந்தது. இவ்வாறான தகவல் தொடர்புமுறை இன்றளவும் பயன்பாட்டில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அவற்றுள் சிலபற்றி இவ்விடத்தில் விரிவாக நோக்குதல் பொருத்தமானதாகும்.

## சைகைவழித் தகவல் தொடர்பு

தொடக்க காலத் தகவல் தொடர்பியலில் சைகையும் ஒன்றாகும். 'சைகை' என்பது உறுப்பசைவின் மூலம் ஒலியற்ற முறையில் கருத்தை வெளிப்படுத்துவது. இச்சைகை மூலம் வெளிப்படுத்தப்படும் ஒவ்வொரு அசைவும் ஒவ்வொரு தகவலை வெளிப்படுத்துவதாக இருக்கும். உடல் உறுப்புக்களின் அசைவின் மூலம் தொடர்புகொள்ளும் கருவியாகச் சைகை மொழி அமைகிறது. இக்காலகட்டம் "மௌன மொழிக்" கால கட்டமாகும். சைகைத் தொடர்பு தருநர், பெறுநர்" ஆகிய இருவருக்கும் இடையே நேரடியான தொடர்பினை ஏற்படுத்துகின்றது. இவற்றின் மூலம் தொடர்பை ஏற்படுத்தும் போது எவ்வித இடையூறுகளும் ஏற்படுவதில்லை.

சைகையில் உடலுறுப்புக்களால் 'குறியீடுகள்' வெளிப்படுத்தப்படுகின்றன. சைகை மொழியில், உடலசைவு (Body Language), முகக் குறிப்பு (Facial Expression), கண்ணசைவு (Eye Expression) என்பன செயற்பாட்டுக்குப் பயன்படுகின்றன. இவற்றின் இயக்கம் மெய்ப்பாடு ஆகும். தொல்காப்பியத்தில் 'மெய்ப்பாடுகள்' பற்றிய குறிப்புக்கள் வந்துள்ளன. மன உணர்ச்சிகளின் வெளிப்பாட்டை 'மெய்ப்பாடு' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பாலெட்டே மெய்ப்பாடென்ப'[1]

என மன உணர்வுகளை எட்டுவகையாகவும் அவை ஒவ்வொன்றும் நான்கு காரணத்தின் அடிப்படையில் தோன்றும் எனவும் இவ்வாறு தோன்றும் உணர்வுகளின் எண்ணிக்கை முப்பத்திரண்டு எனவும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

வாயால் வெளிப்படுத்தப்படும் சொற்களைப் (Words) போலவே கண்கள் காட்டும் சைகையும் மொழியாவதைப் பல்வேறு இலக்கியங்களாலும் அறியமுடிகின்றது.

திருவள்ளுவர் தனது குறட்பா ஒன்றில்,

"கண்ணொடு கண்ணினை நோக்கு ஒக்கின் வாய்ச் சொற்கள்
என்ன பயனும் இல"[2]

இராமனும் சீதையும் பரஸ்பரம் தமது உணர்வுகளைச் சமதடத்தில் பரிமாறிக் கொண்டதைக் கம்பன்,

"அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"[3]

எனக் குறிப்பிட்டுள்ளார். இவை கண்கள் வழித் தகவல் தொடர்பு நிகழ்ந்தமைக்கான வகைமாதிரியான எடுத்துக்காட்டுக்களாகும்.

"கையினால் சொல்லக் கண்களிற்கேட்டிடும்
மொய்கொள் சிந்தையின் மூங்கை"[4]

எனவரும் சீவகசிந்தாமணியின் அடிகள் கண்களும், கையும் தகவல் தொடர்பு உறுப்புக்களாக அமைந்தமையைச் சுட்டி நிற்கின்றன.

## தீ, புகை மற்றும் நெருப்புவழித் தகவல் தொடர்பு

பண்டைத்தமிழர்கள்தீ மற்றும்புகையை எழுப்புவதன்மூலமும்குறியீடாகத் தூரத்தில் உள்ளவர்களுடன் தொடர்பை மேற்கொண்டனர். மலைகளை அண்டிய பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் தாங்கள் கொண்டாடும் திருவிழாக்களைப் பிற மலைநாட்டினரும் அறிந்து கொள்ளும் பொருட்டுத் தீ மூட்டிய அம்புகளை வானத்தில் ஏவினர்.[5] புகையை மூட்டுதல் மூலமும் தீயை நன்கு எரியவிடுவதன் மூலமும் குறியீடுகளை ஏற்படுத்திச் செய்திகளைச் சொல்லும் பணிக்காக பலரும் பணியில் அமர்த்தப்பட்டிருந்ததைப் பல்வேறு நாகரீகங்களிலும் பார்க்க முடிகிறது. கற்களை ஒன்றுடன் ஒன்று உரசித் தீயைக் கண்ட மனிதன், அதனைப் புகையாக்கியும் பயன்பெற்றான்.

## மணி ஓசையின் வழித் தகவல் தொடர்பு

மணி ஓசைகளின் மூலமும் தகவல்கள் பரிமாறப்பட்டன. இன்றும் இம்முறைமை பின்பற்றப்பட்டு வருகின்றது. வீரபாண்டிய கட்டப்பொம்மன் திருச்செந்தூரிலிருந்து பாஞ்சாலங் குறிச்சிவரை மண்டபங்கள் கட்டி மணியை ஒலிக்கச் செய்த பின்னரே தனது மதிய உணவினை உட்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.[6]

## கொடிகள் வழித் தகவல் தொடர்பு

மன்னர் ஆட்சி முறைமையில் 'கொடிகள்' தகவல்களை வெளிப்படுத்துவதில் பெரும்பங் காற்றின. பண்டைத் தமிழ் மன்னர்கள் பலரும் பல்வேறு சின்னங்களைத் தமது கொடிகளில் பொறித்துப் பயன்படுத்தினர். புலி, மீன், நந்தி, வில் முதலானவை அவற்றுட் சிலவாகும்.

ரோமானியர்கள் கண்காணிப்புக் கோபுரங்களை நிறுவி அக்கோபுரங்களில் ஏறிநின்று பல்வேறு கொடிகளை அசைத்தும், ஒலிகளைப் பரப்பியும் தகவல்களைப் பரிமாறினர். 7

## ஒலி வழித் தகவல் தொடர்பு

பண்டைக் காலத்தில் எதிரில் இருப்பவரை அழைக்கக் கூவி அழைத்தலையும், சற்றுத் தொலைவில் இருப்பவர் கவனத்தை ஈர்க்க ஒலி எழுப்புதலையும் ஒருவகைத் தொடர்பு முறையாகப் பயன்படுத்தினர். பண்டைக் காலத்தில் மனிதர்கள் உரையாடல், சர்ச்சை, சிரிப்பு, அழுகை, ஒப்பாரி முதலான பல்வேறு ஒலிகளின் வாயிலாகக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

தினைப்புனத்தை அழிக்கவந்த யானையை விரட்ட 'சீழ்க்கைஒலி' பயன்படுத்தப்பட்டமையை

"கணைவிடு புடையூக் கானங் கல்லென
மடிவிடு வீளையர் வெடிபடுத்து எதிரக்
கார்பெயல் உருமிற் பிளிறிச் சீர்த்தக
விரும்பினர்த் தடக்கை இருநிலம் சேர்த்தி"[8]

எனவரும் 'குறிஞ்சிப்பாட்டு' வரிகள் புலப்படுத்தி நிற்கின்றன. விலங்குகள், பறவைகள் போன்றவற்றை 'ஒலியெழுப்பி அழைத்தல்' பண்டைக்கால ஒலிவழித் தகவல் தொடர்புக்குப் பிறிதொரு சான்றாக உள்ளது.

## முரசு, பறை மற்றும் சங்கு வழித் தகவல் தொடர்பு

பண்டைச் சமூகத்தினர் முரசு, பறை, சங்கு முதலான கருவிகளின் வழியாகவும் தகவல்களைப் பரிமாறிக் கொண்டனர். முரசு மன்னர்களின் அரண்மனையில் முக்கிய கருவியாக இருந்துள்ளது. போர் குறித்த செய்திகள் பறையறைதல் மூலம் பரப்பப்பட்டன. கோட்டைச் சுவர்களின் மீதும் ஊரின் முக்கிய இடங்களிலும் இருந்த முரசுகளினூடாகப் பல்வேறு செய்திகள் அறிவிக்கப்பட்டன. இதனைச் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணமுடிகின்றது.

'ஓரினெய்தல் கறங்கவோரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப"

எனவரும் புறநானூற்று வரிகள் 'முழவு' என்ற கருவிமூலம் ஒலி எழுப்புதல் நடைபெற்றமையைக் குறிப்பிடுகின்றது. இது முறையே ஒரு வீட்டில் சாவீட்டுப் பறையும் மற்றைய வீட்டில் மணப்பறையும் ஒலித்ததைக் குறிப்பிடுகிறது. 'நெய்தல்' கறங்கியது என்பது இறப்பு நிகழ்ச்சியைக் குறிப்பதாக உள்ளது. புறநானூற்றின் பிறிதொரு பாடல் முரசு, வளை என்னும் ஒலிக்கருவிகள் முழங்கியதைக் குறிப்பிடுகின்றது.[10]

இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசக் காலங்களிலும் உள்ளூர்ச் செய்திகளை அறிவிக்க 'முரசு' பயன்பட்டிருக்கின்றது.[11] திருவிழா, படையெடுப்பு, திருமணம், அரசவையின் அவசரக்கூட்டம், முடிசூட்டுவிழா முதலான செய்திகள் பெரிதும் பறை மூலமே அறிவிக்கப்பட்டன.

பறைகள் பலவகைப்பட்டனவாகக் காணப்பட்டன. ஊர்ப் பொதுமன்றங்களில் பறையறைந்து செய்திகள் பரப்பப்பட்டன.

முரசு, பறை, சங்கு இவற்றின் ஒலி செவிக்குப் புலனானது. இவ்வகையான தகவல் தொடர்பில் மேலே சுட்டப்பட்ட கருவிகள் தகவல்களின் மூலமாகவும் 'ஒலி' தகவலாகவும் மன்னன் ஒரு செய்தியை மேற்படி ஊடகங்களின் மூலமாகவும் மக்களுக்குத் தெரியப்படுத்துவான்.

## குறியீட்டின் வழித் தகவல் தொடர்பு

'குறி', 'குறியீடு' (Symbol) என்பன அடையாளங்கள். பண்டைத் தமிழர்கள் தம் கருத்தைக் கூறவும், பிறர் கருத்தை அறியவும் தம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளவும் 'குறியீடுகள்' போன்ற தொடர் முறைகளைக் கையாண்டனர். தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் இத்தகைய தகவல் தொடர்பு முறை பதிவாகியுள்ளது.

பொருளை நேரடியாகத் தராமல் குறியால் பெறவைப்பது குறியீட்டின் பண்பாகும். பெறுநரின் (Receiver) மனதில் பொருளை விரியச் செய்வதே குறியீட்டின் முயற்சியாகும்.

தொல்காப்பியர் குறிப்பிடும் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை போன்ற பூக்கள் போரின் பல்வேறு நிலைகளைச் சுட்டுகின்றன. புறத்திணையில் வரும் போந்தை, வேம்பு, ஆர் ஆகிய மலர்கள் முறையே சேரன், பாண்டியன், சோழன் ஆகிய மன்னர்களுக்குரியவை என்பதனைக் குறியீடாக உணர்த்துவன.[12] தற்காலத்தில் பல அதி நவீன துறைகளிலும் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## வாய்மொழி வழித்தகவல் தொடர்பு

தகவல் தொடர்புகள் பெற்ற மாற்றங்களில் விரைவும் முறையும் வளர்ச்சியும் சமுதாய முக்கியத்துவம் பெற்றவை. மனிதன் மொழியைப் பேசியதிலிருந்து எழுதத் தொடங்கப் பலநூறு ஆண்டுகள் ஆயின.

## நாடகம் வழித்தகவல் தொடர்பு

கருத்தினை மக்களுக்கு எடுத்துக்கூறுவதில், மொழியோடு நேரடித் தொடர்புடையது நாடகமாகும். இந்நாடகம் காலந்தோறும் மக்களின் விருப்பு வெறுப்புக்கேற்ப வளர்ச்சி பெற்று வந்துள்ளது. தமிழில் நாடகம் பண்டைக்காலம் தொட்டே இருந்து வந்துள்ளது.

‘அகத்தியம்’ என்ற இலக்கண நூலில் இயல், இசை, நாடகத்துக்கான இலக்கணம் வகுக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகின்றது.

தொல்காப்பியர் காலத்துக்கு முன்பும் பின்பும் தமிழரிடையே இவ்வடிவம் செல்வாக்கு உடனிருந்தது. நாடக வழக்குப் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.[13] நாடகத்தின் அடிப்படை ‘வெளிப்பாடு’. அதனை நடிகர்கள் மெய்ப்பாட்டின் மூலம் உணர்த்துவர்.

சங்க இலக்கியத்தில் ‘கூத்து’ என்ற சொல் பயின்றுள்ளது. நாடகம் கூத்தின் பகுதியாகவே உள்ளது. சிலப்பதிகாரம்,[14] மணிமேகலை, சீவகசிந்தாமணி, தேவாரம், திவ்யபிரபந்தம், பெரியபுராணம், கம்பராமாயணம் இந்நூல்களில் எல்லாம் நாடகம் தொடர்பான செய்திகளைப் பார்க்க முடிகின்றது.

கதை, கதைமாந்தர், காட்சி அமைப்பு, உத்திகள் முதலான நாடக அமைப்புக் கூறுகள் செய்தி வெளிப்பாட்டுக்கு இன்றியமையாதவையாகும். கருத்துக்களையும் செய்திகளையும் நாடகத்தின் மூலம் வெளிப்படுத்துவதில் பண்டைத்தமிழர் வெற்றி கண்டனர்.

## எழுத்து வழித்தகவல் தொடர்பு

வரிவடிவுகளால் அமையும் தொடர்பு எழுத்து வழித்தகவல் தொடர்பு எனப்படும். இதில் நடுகற்கள், கல்வெட்டுக்கள், ஓலைச்சுவடிகள், செப்பேடுகள், தூதுப்பொருள்கள் எனப் பல்வேறு வகைகள் காணப்படுகின்றன.

‘நடுகற்கள்’ அமைத்தல் குறித்துத் தொல்காப்பியம் இலக்கணம் வகுக்கும் அளவுக்கு இம்மரபு முக்கியத்துவம் பெற்றிருந்தது.

“காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபின் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று மரபில் கல்லொடுபுணர”[15]

எனக் கல்லைக் காண்பது, நீராட்டுவது, கோவில் கட்டி அதனை வழிபாடு செய்வது, நடுவது என இம்மரபின் பல்வேறு முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. வீரர்களுக்குக் கல்நடும் வழக்கம் இருந்துள்ளது. சங்க இலக்கியங்களில் நடுகற்கள் குறித்த பல்வேறு செய்திகள் பயின்றுள்ளன.[16] கல்வெட்டுக்களில் பயின்றுள்ள வட்டெழுத்து மொழியாகவும் (Language) மன்னன் அனுப்புனனாகவும் (Sender) நடுகற்கள் ஊடகமாகவும் (Channel) மக்கள் பெறுநராகவும் (Receiver) வீரம், வரலாறு, வீரனின் பெயர், அரசனின் புகழ், குடும்பம், அரசன் பெயர் என்பன தகவல்களாகவும் (Message) நடுகற்களில் அமைந்துள்ளன. தொன்மைக் காலத்தில் கல்லில் மட்டுமன்றிக் களிமண், பாண்டங்கள், உலோகம், சங்கு, சுடுமண் பொம்மைகள், மரம் முதலானவற்றின் மீதும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டன. இவ்வெழுத்துக்களில் இலக்கணங்கள், இசைநுட்பங்கள், அரச ஆணைகள் உட்பட்ட பல்வேறு விடயங்கள் காணப்படுகின்றன.

எழுத்து வழித்தகவல் தொடர்பில் 'ஓலைச்சுவடி' என்ற ஊடகம் மிகவும் முக்கியமான ஒன்றாக உள்ளது, ஓலைகள் பட்டோலை, பொன்னோலை, மந்திர ஓலை, வெள்ளோலை, பாலோலை என்று இலக்கியங்களிலும் அறையோலை, கையோலை, சபையோலை, இறையோலை, கீழ் ஓலை, தூது ஓலை, ஓலைப்பிடிபாடு என்று கல்வெட்டுக்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அரசர்களின் ஆணைகள், அலுவலர்களின் கட்டளைகள், நாடு, சபை, ஊர்களின் முடிவுகள் புலவர்களின் கவிதைகள் யாவும் பனை ஓலைகளிலேயே எழுதப்பட்டன. அக்கால மக்களிடையே வழக்கில் இருந்த வட்டெழுத்து, பிராமி எழுத்து, கிரந்த எழுத்துக்களிலேயே மேற்படி செய்திப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழர்கள் செப்பேடுகளிலும் தகவல்களைப் பதிவு செய்துள்ளனர். சிறுபான்மையாகத் தங்கம், வெள்ளி, பித்தளை, ஈயம், இரும்பு போன்ற உலோகங்களும் இம்முயற்சிகளில் பயன்பட்டுள்ளன. செப்பேடுகளில் உள்ள மொழி அவ்வக்காலத்தில் வழக்கிலிருந்த மொழியாக உள்ளது. இச்செப்பேடுகளில் மன்னரது படைகள் பற்றிய செய்திகள், நீதி முறைகள், மக்கள் மான்மியங்கள், கோவில் வழிபாடுகள், தானக் குறிப்புக்கள், சமுதாயக் கடமைகள், வழக்குகளின் தீர்ப்புக்கள், சமுதாய வழக்கங்கள், தலபுராணங்கள் முதலான பல்வேறு செய்திகள் பயின்றுள்ளன. செப்பேடுகள் அவற்றின் அமைப்பு நிலையில் முன்னுரை, கொடை பற்றிய விளக்கம், முடிவுரை என்ற மூன்று நிலைகளைக்கொண்டுள்ளன.

பல்லவர், பாண்டியர், சேரர், சோழர் காலத்துக்குரிய செப்பேடுகள் குறிப்பிடத்தக்க அளவில் கிடைத்துள்ளன. ஓலைகளை முன்மாதிரியாக வைத்து நீள்சதுர வடிவில் செப்பேடுகள் அமைக்கப்பட்டன. நீண்ட காலத்துக்குத் தகவல்களை அழியாமல் பாதுகாக்கச் செப்பேடுகள் பெரிதும் பயன்பட்டுள்ளன.

செய்திகளைப் பரப்பும் வாயில்களாக ஒற்றர்களும், தூதுவர்களும் இருந்துள்ளனர். புறாக்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவர்களுடன் 'தூது' அனுப்பும் முறை இவ்வாயில்களுக்கிடையில் அமைந்தது. இம்முறையில் அஃறிணைப் பொருட்களும் மரபு வழிச் சாதனங்களும் பயன்படுத்தப்பட்டன.

'தூது' இலக்கியத்தின் இலக்கணம் குறித்துப் பாட்டியல் நூல்கள் குறிப்பிடுகின்றன.[17] தொல்காப்பியத்தில் தூது பற்றிய செய்திகள் உள்ளன.[18]

ஒருவர் தமது கருத்துக்களை மற்றொருவருக்குத் தெரிவிக்க இடையே பிறிதொருவரைத் தகவலாளியாக அனுப்புவது தூதாகும். இதன் வாயிலாகத் 'தகவல் தொடர்பு' ஏற்படுகிறது. சங்க இலக்கியங்களில் 'தூது' பற்றிய செய்திகள் பரவலாகப் பயின்றுள்ளன. பாணன், பார்ப்பான், புலவர்கள் முதலியோர் தூதுவர்களாகச் சென்றுள்ளமையினை இவற்றினூடே அறிய முடிகிறது.[19]

## ஒற்றர்கள் வழித் தகவல் தொடர்பு

அரசனால் பிறர் அறியாது செய்திகளைச் சேகரித்துக் கொண்டு வர அனுப்பப்படுபவரை 'ஒற்றர்' எனக் குறிப்பிடுவர். ஒற்றறிந்து வருவதனை 'வேய்' எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.[20] திருக்குறள், 'ஒற்றாடல்' பற்றித் தனி அதிகாரமே வகுத்துள்ளது. பிறநாட்டு ஒற்றர்கள் வஞ்சி மாநகரில் வந்து தங்கி இருந்தமையைச் சிலப்பதிகாரம் சுட்டுகிறது.[21] தகவல் தொடர்பில் முக்கிய ஊடகமாக ஒற்றர்கள் பயன்பட்டுள்ளனர்.

## முடிவுரை

பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் தொடக்க காலத் தகவல் தொடர்பில் பல்வேறு முறைமைகள் பயன்பாட்டில் இருந்துள்ளன. மனிதனுடைய நாகரிக வளர்ச்சி இத்தொடர்பாடல் முறைகளில் படிப்படியாகப் பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவந்தது. காலத்தின் தேவைகளுக்கேற்பத் தகவல் தொடர்பியல் வேகமாக வளர்ச்சியடையலாயிற்று. அச்சின் அறிமுகமும் உரைநடையின் தோற்றமும், தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியும் தகவல் தொடர்பில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தின. கி.பி. 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சி செயற்கைக்கோள் முதலான நவீன இலத்திரனியல் சாதனங்களைத் தொடர்பாடல் துறையில் அறிமுகப்படுத்தியது. இத்தன்மையானது தகவல் தொடர்பில் எளிமைத்தன்மையினையும் விரைவுத் தன்மையினையும் கொண்டு வருவதாக அமைந்தது எனலாம்.

## அடிக்குறிப்புக்கள்

01. தொல்காப்பியம், பொருளதிகாரம், (இளம்பூரணம்), 1969, மெய்ப்பாட்டியல், நூற்பா.3.
02. திருக்குறள், நூற்பா, 1100
03. கம்பராமாயணம், பாலகாண்டம், 514 -4
04. சீவகசிந்தாமணி, 997
05. தமிழண்ணல், 1992, தகவல் தொடர்புச் சாதனங்களின் கதை, மணிமேகலைப் பிரசுரம், சென்னை, ப.11
06. கிருட்டிணமூர்த்தி, வெ., 2001, தகவல் தொடர்பியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, ப. 24.
07. தமிழண்ணல், மு.கு.நூ., ப.12.
08. குறிஞ்சிப்பாட்டு, பாடல், 164, வரி :160-164
09. புறநானூறு, பாடல், 194
10. மேலது, பாடல், 158.

11. சிலப்பதிகாரம், மங்கலப்படலம், 43,44.

12. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூற்பா, 5.

13. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா, 56

14. சிலப்பதிகாரம்,அடியார்க்கு நல்லாருரை, அரங்கேற்றுக்காதை, ப.12.

15. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூற்பா, 63.

16. புறநானூறு, பாடல், 221:232.

17. பிரபந்தத்திரட்டு, 30.

18. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா, 25.

19. ஐங்குறுநூறு, பாடல், 477, புறநானூறு, பாடல், 305.

20. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், நூற்பா, 3

21. சிலப்பதிகாரம், காட்சிப்படலம், 173-177

**பேராசிரியர் கலாநிதி கி. விசாகரூபன்,**
**தமிழ்த்துறை, கலைப்பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

# நன்றி நவிலல்



- "தமிழ் ஆரம்" உங்கள் கைகளில் தவழச் செய்வதற்கு வழிகாட்டியாய் நின்ற கல்லூரி முதல்வர், பொறுப்பாசிரியர், மலர்க்குழுவினர், தமிழ்துறை ஆசிரியர்கள்
- தமிழ் ஆரத்திற்கு வாழ்த்துரை வழங்கிய பெரியோர்கள்
- ஆரத்தில் தம் ஆக்கங்களாகிய முத்துக்களைப் பதித்த பெரியோர்கள், மாணவிகள்
- விளம்பரங்களை நல்கி ஊக்கங்களை நல்கி ஊக்குவித்த அன்பு உள்ளங்கள்
- இம் மலருக்கு நயப்புரை வழங்கிய ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் திரு. ச. லலீசன் அவர்கள்
- தமிழ்த்தினப்போட்டிகளில் பங்கேற்றுத் தம் திறமைகளை காட்டிய மாணவிகள், ஊக்குவித்த ஆசிரியர்கள்
- தமிழ் ஆரத்தை வெளியீடு செய்து தந்த மதிப்பார்ந்த பேராசிரியர் திரு. சி. சிவலிங்கராஜா, முதற்பிரதி பெறும் திரு. வி. சுகுமாரன் (மேர்க்கன்ரைல் பாதுகாப்பு சேவை நிர்வாக இயக்குனர்), சிறப்பு பிரதி பெறும் ஆர்வலர்கள்
- மலரை அழகுற அச்சிட்டுத் தந்த "அன்றா" நிறுவனத்தினர்
- அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


THUSHA
OPTICAL AND DENTAL WORKS
துஷா
பல் மூக்கு
கண்ணாடியகம்
இல.544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P - 021 222 3461


பிரஹா
ஜெற் லைன்
வண்ணப் பதிப்பகம்
ஓவ்செற்
பிறிண்டிங்
# 521, Point Pedro Road, Nallur, Jaffna. T.P - 077 613 6722


MEKA MART
மெகா
மாட்
Wholesale
&
Retail
Dealers
in Textiles
Specialist in
Wedding
Sarees
T.P- 021 222 9798
Mobile - 077 293 6536
# 75, Power House Road, Jaffna.


Ark
Enterprises
Water Pumps, Power Tools, Machineries,
Hand Tools, Agriculture Implements,
Tiles, Bathroom Fitting, PVC Pipes,
PVC Fittings, Building Materials, Etc.
No: 150, 133 Stanley Road, Jaffna.
T.P - 021 222 4021, Tiles: 021 222 4688, Fax: 021 222 2052


நியூ
மலாயன் கபே
A1
சைவ உணவகம்
சுகாதாரமுறைப்படி தயாரிக்கப்பட்ட
சிற்றுண்டி வகைகள் மற்றும்
விஷேச வைபவங்களுக்குத் தேவையான சிற்றுண்டி
வகைகளை ஓடர்செய்து தரமாகவும், சுவையாகவும்
பெற்றுக்கொள்ள யாழ். நகரில்
சிறந்த இடம்.
இல.36,38, பெரியகடை, யாழ்ப்பாணம். தொ.பே. - 021 222 2373


அமெரிக்கன் தண்ணீர்
இ.ச.பே. நாகரத்தினம்
சக நிறுவனம்.
7000 ML
5000 ML
1500 ML
1000 ML
500 ML
375 ML
இல. 52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. - 021 222 3096, 021 221 7277


அன்னம்ஸ்
இசைக்கருவிகள்,
அதன் உதிரிப்பாகங்கள்,
இலத்திரனியல் பொருட்கள்
விற்பனையாளர்கள்
118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P - 021 222 7115


G.S.Linganathan & Co
Textiles and
Fancy
T.P - 021 222 3139, 021 222 8107
No.13.14.51, Grandbazar, Jaffna.



SRI
PAPERMART
388, Hospital Road, Jaffna.
T.P - 021 222 2909




வினோதா
பியூட்டி சென்ரர்
(A/C சலூன்)
VINOTHA
BEAUTY
CENTRE
38.நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.




அபிராமி
DSI சூ சென்ரர்
நவீன அழகிய காலணிகளுக்கான
சிறந்த ஸ்தாபனம்.
DSI
அனைத்து விதமான காலணிகளையும் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.
155,156 Modern Market, Power House Road, Jaffna.




மைதிலி
நகை மாடம்
89V. Kasthuriyar Road. Jaffna. Tel : 021 222 7902



மாங்கல்யா
ஜுவல்ஸ்
தங்கப்பவுண்
நகை வியாபாரம்
ஓடர் நகைகள்
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன்
22 கரட்டில்
செய்து கொடுக்கப்படும்.
இல.131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. - 021 222 2140




SARANKA
JEWELLERY
அழகிய கலைநயம்
எழிலுறு தொழில் வளம்
உயர் தரமிகு தங்கநகைகளுக்கு
நாடவேண்டிய ஒரே இடம்...
அரச அங்கிகாரம் பெற்ற நாணய மாற்று சேவை
இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. - 021 222 6972




ISHARA
NEW DRESS MART
Number One
Name In The Fashion
World...!
இஷாரா
இன்றைய
நாகரிகத்திற்கு ஏற்ற
திருமணப் பட்டுப்
புடைவைகளுக்கும்
றெடிமேற் ஆடைகள்
அனைத்திற்கும்
மகத்தான தெரிவிற்கு
நாடவேண்டிய
ஸ்தாபனம்...
T.P - 021 221 9925
இல.199/A. 199/B,
மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.




JAFFNA TEX
Colombo
Fashion
I LOVE
SHOPPING
No. 203. power House Road. jaffna. Nallur(Temple Back Side)
T.P: 077 8093050


ராஜா கிறீம் கவுஸ்
களகரமான நிகழ்வுகளுக்கு
டர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு
உரிய நேரத்தில்
பெற்றுக் கொள்ளலாம்.
இல.37, சேர் பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல. 021 222 1678, 021 320 7369


ஸ்ரீ முருகன்
நகை மாளிகை
அழகிய கலைநயம்
எழிலுறு தொழில் வளம்
உயர் தரமிகு தங்கநகைகளுக்கு
நாடவேண்டிய ஒரே இடம்...
68, Kasthuriyar Road, Jaffna. T.P - 021 222 5965

# TCT Thiyaki Multi Trade Centre




527, Navalar Road, Nallur, Jaffna. Tp- 021 222 8025

க.அ. சின்னையாவும் மைந்தர்களும்

**K.A. CHINNIAH & SONS**



மேசை விரிப்பு,
வாகன.
தளபாட ஆசனத் தயாரிப்பு
பாதணி உற்பத்திப் பொருட்கள்
விற்பனையாளர்கள்

44, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# அன்னை
## புத்தகசாலை



நவீனசந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 021 222 9881


TOPAZ
Jaffna No. 01 Shop
SPECIALIST IN WEDDING SUITS,
WEDDING SAREES,
PARTY SAREES,
WEDDING FROCKS,
PARTY FROCKS AND ALL KINDS OF ITEMS.
JAFFNA NO-01 SHOP
No.72, Grand Bazaar, Jaffna. Te.- 021 222 4743


இராஜேஸ்வரி
ரெக்ஸ்ரைல்
இன்றைய
நாகரிகத்திற்கு ஏற்ற
திருமணப் பட்டுப்
புடைவைகளுக்கும்
றெடிமேற் ஆடைகள்
அனைத்திற்கும்
மகத்தான தெரிவிற்கு
நாடவேண்டிய
ஸ்தாபனம்...
இல. 105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. - 021 222 6953



ANDRA
PRINTERS
Awards Shields Medals Trophies
T Shirt Printing
ID Card Printing
Mug Printing
Jaffna Hindu College
Sports!
LIVESTRONG
நினைவால் இணைவோம்
எழுதுகோல்
BATTLE OF THE NORTH
கண்ணீர்ப் பூக்கள்
புத்தகங்கள் | சஞ்சிகைகள்
லேபிள்கள் | விசிற்றிங் காட்
போஸ்ரர்கள் | துண்டுப்பிரசுரங்கள்
356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 221 7279 / 077 6622981
பிரதான அலுவலகம் :
379. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
021 222 8929
கிளைகள்
165. மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். 021 221 9929
470/2. கண்டி வீதி (A9). கிளிநொச்சி. 021 720 1275